# தென்றல்

பதிவு இலக்கம் : 361910

காற்று : 05 சுகந்தம் : 16 (தை - பங்குனி) 2012






வாசகர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கூட்டுறவுப்பணியாளர்கள், உள்ளூராட்சி மன்றத்தலைவர்கள் அனைவருக்கும் புதுவருட, தைத்திருநாள் வாழ்த்துக்கள்!

கலாபூஷணம் தாழை செல்வநாயகம்


65/=

தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை!

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புதுவருட, தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்!

Life's Good

# LG Abans
## Show Room




LG MDT354 ஹை – பை ஓடியோ சிஸ்டம்
ரூ.32.990
மாதாந்தம் ரூ.2,199


வட்டியில்லா
12 மாத
கொடுப்பனவு




LG HT355 ஹோம் தியட்டர் சிஸ்டம்
ரூ.18,990
மாதாந்தம் ரூ.1,266




SRS 185
ஒற்றைக்கதவு குளிரூட்டி
ரூ.34,900
மாதாந்தம் ரூ.2,047




LG GLM252
ரூ.59,900
மாதாந்தம் ரூ.4,393



Philips 32PFL 3605-32" LCD TV
ரூ.59,990
மாதாந்தம் ரூ.3,999



LG LOW WATT வளிச்சீராக்கி
9,000BTU - ரூ.79,900
மாதாந்தம் ரூ.5,660
12,000BTU - ரூ.94,900
மாதாந்தம் ரூ.6,660



LG LOW WATT INVERTER வளிச்சீராக்கி
9,000BTU - ரூ.99,900
மாதாந்தம் ரூ.6,660
12,000BTU - ரூ.119,900
மாதாந்தம் ரூ.7,993
18,000BTU - ரூ.174,900
மாதாந்தம் ரூ.11,660
24,000BTU - ரூ.199,900
மாதாந்தம் ரூ.13,327

(நிபந்தனைகளுக்குட்பட்டது)

**தொடர்புகளுக்கு....**
**அபான்ஸ் காட்சியறை,**
**263, 265, திருமலை வீதி,**
**மட்டக்களப்பு.**
**தொலைபேசி இல : 065-2227895**

AD/0020

# தென்றல்

# THENDRAL



44/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு
தொ.பே : 077 - 6983597
பெக்ஸ் : 065 - 2227542
Email:- kirupabatticaloa@yahoo.com



**ஆசிரியர்**
க. கிருபாகரன்

**ஆசிரியர் குழு**
திரு. வீ. கே. ரவீந்திரன்
திரு. இ. கோபாலபிள்ளை
திருமதி. கவிதா. கிருபாகரன்
கலாபூஷணம். ஆ. அரசரெத்தினம்

**ஆலோசகர்**
இரா. நாகலிங்கம்
(அன்புமணி)

**ஓவியம்**
சி. டானியல்

**கணணி வடிவமைப்பு**
அ. ஜெயலக்ஸ்மி



**ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாளிகளாவர். (ஆ-ர்)**


# கலைஞர்கள் வாழ்க!

கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், காணி, காணி அபிவிருத்தி, விளையாட்டுத்துறை அமைச்சு அண்மையில் கிழக்கு மாகாண இலக்கிய விழாவை கோலாகலமாக மட்டுமாநகரில் நடத்தியது.

இவ்விழாவில் இலக்கிய நூல் பரிசினை ஒன்பது எழுத்தாளர்களும், முதலமைச்சர் விருதினை பன்னிரெண்டு முன்னணி கலைஞர்களும் பெற்றுக் கொண்டனர்.

இவர்கள் அனைவரையும் "தென்றல்" மனதாரப் பாராட்டுவதோடு, வாழ்த்துகிறது.

இவர்களில் முதலமைச்சர் விருது பெற்ற கலாபூஷணம், ஆறுமுகம் அரசரெத்தினம் "தென்றல்" ஆசிரியர் பீட உறுப்பினர் எனக்கூறிக் கொள்வதில் பெருமையடைகிறோம்.

அத்தோடு முதலமைச்சர் விருது பெற்ற திருமதி அசோகாம்பிகை யோகராஜா,

மற்றும் கவிதை நூலான செங்கமலத்துக்கு நூல் பரிசு பெற்ற ஆ.மு.சி. வேலழகன் ஆகியோர் **"தென்றலில்"** ஆரம்பகாலம் தொட்டு இன்று வரை எழுதி வரும் இலக்கிய விருட்சங்கள் என்பதிலும் இரட்டிப்பு மகிழ்ச்சி!

எனவே இவ்வாறான பெருந்தகைகளை **"தென்றல்"** ஏலவே உள்வாங்கி செயற்பட்டிருப்பது தென்றலுக்கு வலுச் சேர்த்துள்ளது என்பதை எண்ணிப்பார்க்கையில் தென்றலின் பலம் புரிகிறதல்லவா?

இவ்வேளையிலே இலக்கிய உலகுக்கு நல்லதைச் செய்ய உறுதி பூண்டுள்ளேன் எனக்கூறிய கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனுக்கும் **"தென்றல்"** தனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

**என்றென்றும் அன்புடன்**

**-ஆசிரியர்-**

## தென்றல் கட்டண விபரம் (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | வெளிநாடு |
|---|---|---|
| ஓராண்டு கட்டணம் | 300/= | US$20 |
| ஆயுள் கட்டணம் | 4000/= | US$100 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "தென்றல்" இலவசமாக வழங்கப்படும்.

## விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின்அட்டை வெளிப்புறம் | 2000/= | 1000/= |
| முன் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| பின் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| உட்பகுதிகள் | 1000/= | 500/= |

## அன்பளிப்பு

அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.

வங்கி : மக்கள் வங்கி (நகரக்கிளை) மட்டக்களப்பு.
கணக்கு இல : 113100170002181
(நடைமுறைக்கணக்கு)
காசுக்கட்டளை : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.

உலகின் செம்மொழித் தகுதி பெறுவதற்கு தகைமைகள் பல வேண்டும், தொன்மையான, தொடர்ச்சியான, உலகப் பொதுமையான, மனித விழுமியங்களை தன்னகத்தே கொண்டதான, எளிமையான, இனிமையான இலக்கியங்களும் மொழியின் பழமை, செழுமை, தனித்துவம், கட்டுக்கோப்பு என்பவற்றைப் பேணுகின்ற இலக்கணங்களும் முதன்மை பெறுகின்றன. பேசும் போதும், வாசிக்கும் போதும், பாடும் போதும், நடிக்கும் போதும், எழுதும் போதும் அச்சு ஊடகங்களிலும், இலத்திரனியல் ஊடகங்களிலும் செம்மொழியாக தகுதி பெற்ற எம் தாய் மொழியாம் தமிழ் மொழியை பேணி வளர்க்க முயல்வோமாக!

# காய்வரின் தெங்கு நீளும்

- கலாபூஷணம் ஆறுமுகம் அரசரெத்தினம் -

உலக செல்வங்களுள் **"கேள்விச் செல்வம்"** சிறந்தது என்பதனை **"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை"** என்று கூறி, கேள்விச் செவியன் ஊரைக் கெடுப்பான் என்பதை உணர்ந்து **"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் - அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு"** என்றும் கூறி, கண்ணால் கண்டவற்றையும் காதால் கேட்டவற்றையும் ஐயம், திரிபு, அறியாமை நீங்க ஆராய்ந்தறிவதே சிறப்பு என்றார் திருவள்ளுவர். எள்ளின்றும் எண்ணெய் எடுப்பது போல இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் கூற முற்பட்ட தமிழிலக்கண நூலோர் உலகியலை ஒட்டியதாக இலக்கண விதிகளை யாத்துள்ளனர்.

தமிழ் மொழியில் சொற் புணர்ச்சி முக்கிய இடம் பெறுகிறது. நிலைமொழி வருமொழிகளுக்கு ஏற்ப இலக்கண விதிகள் மாறுபடுகின்றன. மா, பலா, வாழை, கொய்யா, கத்தரி, தக்காளி, பூசணி, அவரை முதலான மரம், செடி, கொடிகளின் பெயர்கள் நிலைமொழியாக இருக்கும் போது **"காய்"** என்ற வருமொழிச் சொல் சாதாரணமாகப் புணர்கின்றது. மாங்காய், கத்தரிக்காய், அவரைக்காய் என்பன எடுத்துக் காட்டுகள். ஆனால் **"தேங்காய்"** என்பதை தெங்கு + காய் என்று பிரித்து

எழுதுகின்றோம். பழந்தமிழ் இலக்கியங்களில் தென்னை மரத்தை **"தெங்கு"** என்றே குறிப்பிட்டனர். சிலர் தெங்கங்காய், தெங்கின் பழம் என்றும் எழுதுவ துண்டு. ஆனால் **"தேங்காய்"** என்று எழுதுவதே பெருவழக்கு. இதற்கான இலக்கண விதி கூறவந்த நன்னூலார் **"தெங்கு நீண்டீற்றுயிர் மெய்கெடும் காய்வரின்"** (நன் - 187) என சூத்திரம் யாத்தார். **"தெங்கு"** என்ற மரப்பெயர் நிலைமொழியாகும் போது **"காய்"** என்ற வருமொழிச் சொல் புணர்வதற்கு தெங்கு என்பது தேங்கு என நீண்டு அதன் ஈற்றிலுள்ள உயிர்மெய் எழுத்தாகிய **"கு"** என்பது கெட தேங்காய் எனப் புணரும் என்றார். கேள்விச் செவியர் சிலர் தென்னை மரம் காய்ப்பதற்குரிய பாளை வரும் போது திடீரென நீண்டு வளரும் என்றனர். பெண் பிள்ளைகளில் திடீரென நீட்சி, வளர்ச்சி, செழிப்பு, மலர்ச்சி காணப்படுமாயின் அவள் பூப்படையப் போகின்றாள் என்று உலகியலோடும் ஒட்டிவிட்டனர்.

கமுகு மரத்தின் காயினை பாக்கு என்றழைக்கின்றனர். அதன் பழத்தினை கமுகம் பழம், பாக்குப் பழம் என்று கூறாமல் பழப்பாக்கு என்று கூறுகின்றோம். பனைமரத்தில் இருப்பதைப் பன்னாடை என்று சொல்வது பொருந்தும். தேங்காய்ப் பால் வடிப் பதற்கு தென்னை மரத்தில் உள்ள வடி தட்டை பன்னாடை என்ற பெயரில் பயன்படுத்துகின்றோம். இவ்வாறான வழக்காறுகளுக்குரிய இலக்கண விதிகளை காணமுடியவில்லை. அறிந்த அறிஞர்கள் வெளிப்படுத்தினால் தமிழ் மொழி செம்மொழியாகி மேலும் சிறப்புறும்.

**எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கல்வியியலாளர்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.**
**அனுப்பிவைக்கப்படும் ஆக்கங்கள் புள்ஸ்கப் தாளில் 03 பக்கங்களுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.**
**(ஆ–ர்)**

# தென்றலின் தேடல்

-க.கிருபாகரன்-

## கலாபூஷணம் தாழை செல்வநாயகம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை - பேத்தாழையில் பிறந்து ஆக்க இலக்கியம், நாடகம், கூத்து ஆகியவற்றிற்காக பல விருதுகளைப் பெற்றுள்ள தாழை செல்வநாயகத்தை **"தென்றலின் தேடல்"** வாயிலாக வெளிக் கொணர்வதில் **"தென்றல்"** பேருவகையடைகிறது.

## கலைத்துறை அனுபவங்கள்

இவர் பாடசாலையில் படிக்கின்ற காலத்திலேயே நாடகம் நடிக்கத் தொடங்கி விட்டார். 15 வயதில் கம்பன் கலாமன்றம் என்ற பெயரில் ஒரு கலை மன்றத்தினை உருவாக்கி, அதன் கன்னிப் படைப்பான **"மூடிய திரை"** எனும் நாடகத்தில் கதாநாயகனாக நடித்துள்ளார். அதனைத் தொடர்ந்து பல நாடகங்களிலும் தனது ஆற்றலை வெளிக் கொணர்ந்துள்ளார்.

கூத்தினைப் பொறுத்த வரையில் சிறு வயது முதலே கட்டியக் காரனாக ஆடியுள்ளார். தனது கிராமத்தில் **"புலவர்மணி கலாமன்றம்"** என்ற பெயரில் ஒரு மன்றத்தினை உருவாக்கி, அதன் மூலம் பாரிய கலைகளான கூத்து, மகுடி விளையாட்டு ஆகியவற்றினை அழிவடையாது பாதுகாத்து வருகிறார்.

அத்தோடு பிரபலமான அண்ணாவிமார்களைக் கொண்டு **"பப்ரவாகன் கூத்து", வள்ளியம்மன் நாடகம்", "14 ஆம்போர்"** ஆகிய வட மோடிக் கூத்துக்களை பாடசாலை மாணவர்களையும், ஆடற்கலைஞர்களையும் பயிற்றுவித்து அரங்கேற்றியுள்ளார். 1995 ஆம் ஆண்டு, காலப் பகுதியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவையில் கூத்து தொடர்பாக பல்வேறு உரைகளை நிகழ்த்தியுள்ளார்.


## எழுதி வெளியிட்ட நூல்கள்

**"வாழைச்சேனையின் வரலாற்று விழுமியங்கள்", "வள்ளியம்மன் நாடகம்"** (வடமோடி) ஏதிலிகள் (சிறுகதை), ஈழம் வருகிறான் பாரதி (நாடகநூல்) போன்றன.

இலங்கையின் ஆற்றல் மிக்க – மூத்த படைப்பாளிகள் பலரை எமது இன்றைய இளம் தலைமுறையினர் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். ஈழத்து இலக்கிய, இசைத் துறைக்கு பெரும் பங்காற்றிய அத்தகைய இலக்கிய விருட்சங்களை வெளி உலகுக்கு கொண்டு வரும் வகையிலேயே "**தென்றலின் தேடல்**" எனும் இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## பெற்ற கௌரவங்கள், விருதுகள்

1. பாடசாலை காலத்திலேயே பேச்சு, விவாதம், விளையாட்டுப்போட்டிகளில் பங்கு கொண்டு பரிசில் பெற்றுள்ளார்.



2. தாரகை எனும் சஞ்சிகை அகில இலங்கை ரீதியில் நடத்திய சிறுகதைப் போட்டியில் **"எனது சுய மரியாதை புதைக் கப்படுகிறது"** எனும் சிறுகதைக்கு முதல் பரிசு பெற்றமை.

3. இதுவரையும் கோற ளைப்பற்று கலாசாரப் பேரவை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், கல்குடா கல்வி வலயம் ஆகியவற்றின் மூலம் கலைஞர் கௌரவப்பட்டங்கள் பெற்றமை.

4. 2007ஆம் ஆண்டு கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சினால் ஆளுனர் விருதும், 2008ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் அதியுயர் விருதான **"கலாபூஷணம்"** விருதும் பெற்றுள்ளார்.

இவ்வாறாக தனது ஆக்கங்களை, பத்திரிகைகள், சஞ்சிகைகளில் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கும் தாழை செல்வநாயகத்தின் எழுத்தாக்கல் பணிகள் தொடரவேண்டுமென **"தென்றல்"** மனதார வாழ்த்துகிறது!

- மருதூர் ஜமால்தீன் -



# தென்றலே...!

தென்றலே நீ வந்து செல்வாய்
தெவிட்டாத தமிழ்தந்து கவர்வாய்
நன்றுந்தன் பணியாலே நாளும்
நலிவொடிந்தறிவு வந்து சூழும்

அறிவுள்ள கலையம்சம் யாவும்
அடுக்காக விளைத்துண்மை மேவும்
செறிவுள்ளயிலக்கியத்தின் சொத்தாய்
செயலாற்றியுழையும் தமிழ் வித்தாய்




மட்டுநகர் பிறந்தாலு மெங்கும்
மாறாதுன் தமிழ்க்காற்று தங்கும்
எட்டியுனைப் பற்றிடுவோர் தெளிவார்
ஏற்காது வெறுத்திடுவோர் முறிவார்

இனங்களிடையொற்றுமையின் வாசம்
இம்மண்ணில் தழைத்துன்னால் வீசும்
பிணக்கம் தீய்பகையொழிக்க நாடு
பல்கலையும் வளர்த்து நல்லேடாய்


மாறாத இலக்கியத்திலொளிர்வாய்
மக்கள் மனமன்றினில் மிளிர்வாய்
பேறாகும் சமூகப் பணியொன்றே
பெருமையோடுனை வளர்க்கும் நன்றே!




இன்றைய நவீன யுகத்தில் பல்வேறு பரிணாம மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில் அம்மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில் எம்மை அழகுபடுத்த வேண்டிய தேவையுள்ளது. இந்த விடயத்தைக் கருத்திற் கொண்டு **“தென்றல்”** இவ் இதழில் இருந்து அழகுக்கலை தொடர்பான குறிப்பை எமது வாசகர்களுக்காக வழங்குகிறது. (ஆ+ர்)

- ஆ.தாட்ஷாயினி- Diploma in Beauty Culture - இருதயபுரம்.

# தலைமுடிக்கான சிகிச்சை முறைகள்



### இளநரைக்கான சிகிச்சை

இஞ்சியை சிறு சிறு துண்டுகளாக வெட்டி தேனில் ஊறவிடவும். பின்பு ஒவ்வொரு நாளும் அதிலிருந்து ஒரு கரண்டி சாப்பிட்டு வந்தால் விரைவிலேயே நல்ல பயன் கிடைக்கும்.

### தலைமுடி உதிர்வதற்கான சிகிச்சை

முட்டை மஞ்சள் கருவுடன் தேன் சேர்த்து தலையில் பூசி மசாச் பண்ணி அரை மணித்தியாலயத்தில் கழுவி விடவும்.

### தலைமுடி வெடிப்பதற்கான சிகிச்சை

ஒலிவ் எண்ணெயை தலைமுடியில் பூசி தலைமுடியை Foil paper னால் 1/2 மணித்தியாலயத்திற்கு சுற்றி வைத்து அகற்றிவிடவும்.

### பொடுகினை அகற்றுவதற்கான சிகிச்சை

பொடுகிற்கான ஷம்போவுடன் 2 அஸ்பிரின்களை பவுடராக்கி சேர்த்து தலைமுடியை அலசவும்.

### தலைமுடி பளபளப்பிற்கான சிகிச்சை

முட்டை, தேன் அத்துடன் ஒலிவ் எண்ணெய் சேர்த்து கலவையாக தலையில் இட்டு சிறிது நேரத்தின் பின் காரமற்ற ஷம்போவினால் கழுவி விடவும்.

# சங்கமன்கண்டி தொன்மை வரலாறு

- க. தங்கேஸ்வரி, பி.ஏ.(தொல்)சிறப்பு -

நாம் அறிந்த இலங்கை வரலாறு என்பது சிங்கள வரலாற்றுச் சான்றுகளின் படி விஜயன் வருகையுடன் ஆரம்பமாகி நான்கு தலைமுறையின் பின்னர் ஆட்சியேற்ற பந்துகாபயன் காலத்தில் அனுராதபுரம் தலைநகராக்கப்பட்டு உருவாக்கப்பட்ட இராஜரட்டை இராஜதானியின் வரலாறாகும். இது மகாவம்சம் கூறும் தகவலாகும். இந்த மகாவம்சம் எனும் நூலின்படி தேவநம்பியதீசனின் தம்பியான (கி.மு. 207 - 247) மகாநாமன் ரோகணைக்கு சென்று ஆட்சி அமைத்தான் எனவும் இதன் பின்னரே ரோகணை இராட்சியம் உருவாகியது என்றும் கூறப்படுகிறது. மகாநாமன் ரோகணைக்கு செல்லுமுன்னரே அங்கு இராட்சியம் அமைந்திருந்தது. அதனைக் கதிர்காமச் சவுத்திரியர்கள் ஆட்சி செய்தார்கள் என்ற உண்மையையும் சந்தணகாமம் போன்ற பல சிற்றரசுகள் இருந்தன. என்பதனையும் மகாவம்சம் மூலமே அறிய முடிகிறது. தேவநம்பியதீசனின் வெள்ளரசு மரநாட்டு விழாவிற்கு (கிமு 246) கதிர்காமச் ஷத்திரியர்களும், சிற்றரசர்களும், சந்தணகாம பிரபுக்களும் அழைக்கப்பட்டிருந் தார்கள் என்ற செய்தி மகாவம்சம் கூறும் செய்தியாகும். இதனால் தென்பகுதியில் தமிழ் மன்னர்களது ஆட்சிக்குரிய இராட்சியமும் சிற்றரசர்களும் இருந்ததை தெளிவாக அறியமுடிகிறது.

இக் கதிர்காமச் ஷத்திரிய மன்னர்கள் கதிர்காமம் தொடக்கம் வெருகல் வரை பரந்திருந்த பிரதேசத்தை ஆட்சி செய்தார்கள் என்பதற்கு இப்பிரதேசம் முழுவதும் காணப்பட்ட முப்பதுக்கும் மேற்பட்ட பிராமிக்கல்வெட்டுக்களும், அரண்மனை இடிபாடுகளும் ஆதாரமாக அமைகின்றன. சங்கமன்கண்டிக் காட்டினுள் விரவிக்கிடக்கும் கட்டிட இடிபாடுகள் இக்கதிர்காமச் க்ஷத்திரியர்களது அரண்மனை இடிபாடுகள் என்பதை தெளிவாக உணரமுடியும். இவர்கள் தேவநம்பியதீசன் காலத்திற்கும் முற்பட்டவர்கள் (கிமு 247 முன்)

## தென் இலங்கையில் ஆட்சி செய்த கதிர்காமச் ஷத்திரியர்கள்

சிங்கள வரலாற்று நூல்களில் இடம் பெறும் கதிர்காமச் க்ஷத்திரியர்கள் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும். இவர்கள் யார்? ஈழவரலாற்றில் இவர்க ளது நிலமை என்ன? இவர்களது பூர்வீகம் எத்தகையது? இவர்களது ஆட்சிக்காலம் எப்படிப்பட்டது போன்ற விபரங்கள் சிங்கள வரலாற்று நூல்களில் இடம் பெறவில்லை. ஆக தேவநம்பியதீசனின் வெள்ளரசு மரம் நாட்டு விழாவிற்கு அழைக்கப்பட்டார்கள் என்று மட்டுமே கூறும்.

இவ்விடயம் பற்றி சுருக்கமாகப் பார்ப்போம். இலங்கையின் கிழக்குப் பிரதேசங்களில் வாழ்ந்த நாகர்கள் இடைக்கற்காலத்தைச் சேர்ந்தவர்கள். இடைக்கற் காலம் என்பது கிமு. 35000 ஆண்டுகள் ஆகும். இந்நாகர்கள் ஈழ வரலாற்றில் முக்கிய இடம் பெறுகின்றனர் எனவும், இக்கால எழுத்துமொழி தெமழி எனவும் தொல்பொருளியல் திணைக்கள ஆணையாளர் ஷிரான் ரெட்ரனியகல கூறியுள்ளார்.

சிங்கள வரலாற்று நூலாகிய மகாவம்சத்தில் சொல்லப்பட்ட விடயங்களை விட சொல்லாமல் விடப்பட்ட விடயங்களே பெரும் குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. என மகாவம்ச நூலின் மொழிபெயர்ப்பாளர் வில்லியம் கெய்ஸர் கூறுவர்.

அதைப் போல தென்னிலங்கை வரலாற்றில் சொல்லாமல் விடப்பட்ட விடயங்கள் வரலாற்றில் பெரும் இடைவெளியை ஏற்படுத்தி உள்ளன எனலாம். ஈழ வரலாற்றிலே பல விடயங்களை மறைத்தும், திரித்தும் தமிழர் வரலாற்றை இருட்டடிப்புச் செய்தும் எழுதிய சிங்கள வரலாற்றாசிரியர்கள் கதிர்காம க்ஷத்திரியர்கள் பற்றி கூறாமல் விட்டதில் ஆச்சரியமில்லை.

டாக்டர் பரணவிதான தமிழர் வரலாற்றைக் குளறுபடி செய்திருந்தாலும் அவர் கூறியிருக்கும் சில தகவல்களை ஆதாரமாகக் கொண்டு சில உண்மைகளை நாம் அறிந்து கொள்ளலாம்.

## ரோகணைப் பிரதேச பிராமிக் கல்வெட்டுக்கள்

**1)** கதிர்காமத்திற்கு தென்கிழக்கே இருபது மைல் தூரத்தில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள போவத்தகல (Bovattagala) கல்வெட்டுக்கள்

**2)** கதிர்காமத்திலிருந்து இருபது மைல் கிழக்கே உள்ள கொட்டமூஹேலக் கல்வெட்டு

**3)** அம்பாறைக்கு கிழக்கே சங்கமன் கண்டி அருகில் உள்ள மொட்டையா கல கல்வெட்டு.

**4)** மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடிப்பிரிவில் பதுளை வீதியில் உள்ள குசலான்கந்த கல்வெட்டுக்கள்.

**5)** மட்டக்களப்பு மாவட்டத்தில் பதுளை வீதியில் உள்ள கல்பொத்தான கல்வெட்டு.

**6)** அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஹெரண்ணன்ன கலக் கல்வெட்டு.

**7)** அம்பாறை மாவட்ட லேதனமுல்ல கல்வெட்டு.

**8)** அம்பாறை மாவட்ட சங்கமான்கண்டிக் கல்வெட்டு.

**9)** அம்பாறை மாவட்டத்தில் கிரிமருல் கொல்லவில் உள்ள கிரிமருல்கொல்ல கல்வெட்டு.

-தொடரும்-

# ஈழத்துச் சஞ்சிகை வரலாற்றில் சாதனை படைத்த தர்மகுலசிங்கம்!

- ச.மணிசேகரன் -



மரணங்கள் விதிவிலக்கல்ல. ஆனால் என்றோ இறப்பு நிகழும் என்றறிந்தும் சிலதை உணர மறுக்கிறது புத்தி. நேற்று இருந்தவர் இன்றில்லை. திக்கவயல் தர்மகுலசிங்கம் என்ற நல்ல மனிதனின் இறப்பும் அவ்வாறானதே. அறுபத்து நான்கு வருட வாழ்வில் அவர் ஆற்றிய பணிகள் அற்புதமானவை.

கவிதேசம், சுவைத்திரள் என்ற இரண்டு சஞ்சிகைகளின் ஆசிரியர். கவிதேசம் கவிதைக்கான சஞ்சிகையாகவும், சுவைத்திரள் நகைச்சுவை ஏடாகும். சிரித்திரனுக்குப் பின் தொடர்ச்சியாக பத்தொன்பது வருடங்களாக 1993 இருந்து இன்று வரை முப்பத்தேழு இதழ்களை வெளிக்கொணர்ந்தவர் என்ற பெருமைக்குரியவர். அதுவும் மட்டக்களப்பு மண்ணிலிருந்து வெளியிட்டு இம் மண்ணுக்கு பெருமை சேர்த்தவர். சுவைத்திரளை உலக சஞ்சிகை என்று பெயரிட்ட துணிச்சல்காரர். தத்துவம், தமிழ், நகைச்சுவை, வரலாறு, கவிதை என்று எட்டு நூல்களின் சொந்தக்காரர்.

ஆனால் அமைதியான நல்ல மனிதனாக வாழ்ந்ததினாலோ என்னவோ யாரும் இவரை பெரிதாக கண்டு கொள்ளவில்லை. போட்டிகளில் பெற்ற பரிசுகளை விட விருதுகளும் பெரிதாக இவரைக் கண்டு கொள்ளவில்லை. விருதுகளைத் தேடும் வழிகளும் இவருக்குத் தெரியவில்லை. இறுதியாக இரு வாரங்களுக்கு முன்பு தான் மண்முனை வடக்கு பிரதேச செயலகம் இவருக்கு ஆக்க இலக்கியத்துக்காக கலைச்சுடர் விருது கொடுத்து கௌரவித்தது. காலமறிந்து இக்கைங்கரியத்தைச் செய்த மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.


இவரின் படைப்புக்களையும், பங்களிப்புக்களையும் சரியாக மதிப்பீடு செய்ய வேண்டும். இலக்கிய உலகில் இவருக்குரிய இடத்தை அளிக்க வேண்டியது நம்முடைய தலையாய கடமையாகும். இவர் யாழ் மண்ணை பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு மண்ணை வாழ்விடமாகவும் கொண்டவர்.

நகைச்சுவைக்கான சுவைத்திரளின் வெற்றிடம் வெற்றிடமாகவே விளங்கப்போகின்றது. என்ற சந்தேகம் அனைவரினதும் மனதில் எழுகின்றது. காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

இவ்வேளையில் திக்கவயல் தர்மகுலசிங்கத்துக்கு **"தென்றல்"** தனது அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கின்றது.

# விதியின் வழியில்....

- திருமதி செவ்வந்தி சதீஸ்வரன்



கொழும்பை நோக்கிப் புறப்படும் இரவு நேரக்கடுகதிப் புகையிரதம், பயணிப்பதற்கு ஆயத்தமாக மட்டக்களப்பு புகையிரத மேடையில் நின்று கொண்டிருக்கிறது.

ஓடி வந்த கண்மணி ஆசிரியை..... சேர்! சிலீப்ரெற் பெட்டி எது?...... என்று மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கக் கேட்டவாறு ..... புகையிரதத்தில் ஏற, எத்தனித்துக் கொண்டிருந்தாள்.

கொஞ்சம் பொறுங்கோ அம்மா....! ஆகக் கடைசிப் பெட்டியில் போய் ஏறுங்கோ......

என்று கூறிவிட்டு விசில் அடித்ததும் புகைவண்டி வழக்கம்போல் தலைநகர் நோக்கிப் புறப்பட்டது.

அவள் கடந்தகால நினைவுகளை மீட்டுப் பார்க்கிறாள்.

அரச சேவையில் உள்ள யாவரும் வயது முடிந்து விட்டால் கட்டாயம் ஓய்வு பெற்றுத்தான் ஆகவேண்டும். இருபது வயதில் ஆசிரியத் தொழிலில் சேர்ந்த அவள் இன்று ஐம்பத்தைந்து வயதுக் கிழவியாகி விட்டாள்.

அவளைப் பார்க்கும் எவரும் **'பென்சன்காறி'** என்று அவளைக்கணிக்க மாட்டார்கள்.

அப்படிப்பட்ட உடல்வாகும், இளமைப்பூரிப்பும் உடையவள். பார்வைக்கு, சினிமாக்காரி மனோரமாவைப் போன்றிருப்பாள். ....

கிழக்கு மாகாண கல்வி அமைச்சு இவளை சிறந்த ஆசிரியப் பெண்மணியாகத் தெரிவு செய்திருந்தது. பங்குனி மாதம் எட்டாந் திகதி கொண்டாடப்படும். **"மகளீர் தினத்தில்"** கௌரவித்துப் பரிசு வழங்குவ தற்காகவே

அவளை கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்திற்கு அழைத்திருந்தனர். அதற்காகவே அவள் சென்று கொண்டிருக்கிறாள். இரவு பகலின்றி தன் வாழ்நாள் முழுவதையும்கல்விப் பணிக்காக அர்ப்பணித்த கண்மணி ஆசிரியை கருணை, காருண்யம், தயாள சிந்தை அனைத்தும் இலக்கணங்களாக கொண்டவள். எந்த நேரமும் தனது பணியில் கண்ணும், கருத்துடனும் கடமையாற்றியவள்.

கண்மணி தனது மடியில் சுமையாகவிருக்கும் பிரயாணப் பையினை மறந்து விட்டாள். எழுந்து நின்று பிரயாணப் பொதிகள் போடும் பலகையில் அதனைப் போட்டு விட்டு இருக்கையில் அமர்கிறாள்.

**"ரயில் நின்று விட்டது? ..........."** ஏதோ ஒரு புகையிரத நிலையமாகத் தான் இருக்க வேண்டும்.

அன்று பௌர்ணமி தினமாகையால், யன்னல் கண்ணாடியூடாக கண்களை மேய விட்டாள்.

அந்தக்குளத்தில் மீனவர்கள் கட்டிய வலையில் இருந்து மீன்களை இழுத்து எடுத்து தோணிக்குள் போடுவது அவள் கண்களுக்குத் துல்லியமாகத் தெரிகின்றது.

புணானைப் புகையிரத நிலையம். இங்கு சனங்கள் ஏற மாட்டார்கள். பாதுகாப்பு படையினர் மாத்திரமே ஏறுவார்கள்.

இது ஒரு காட்டுப்பிரதேச புகையிரத நிலையம்.

மயிலந்தனைப் படுகொலைகளையடுத்து இங்கிருந்த மக்கள் அகதிகளாக வெளியேறி விட, இந்த ஊர் மீண்டும் காடாகி விட்டது.

இப்பிரதேசத்தின் குடிகளாகி விட்ட ஆமிக்காரர்கள் மாத்திரமே ரயிலில் ஏறுகின்றார்கள்.

தனக்கே உரிய பாணியில் சத்தமிட்டவாறு ரயில் மீண்டும் புறப்படுகின்றது........

கண்மணிக்குப் பதவி கிடைத்ததில் இருந்து அவள் பல்வேறு இடங்களிலும் விருப்பத்தோடு தனது சேவையை ஆற்றியுள்ளாள்.

மலைநாட்டிலும் சரி கஷ்டப் பிரதேச பாடசாலைகளிலும் சரி சளைக்காமல் கற்பித்து, இன்று அவள் பெயரினைக் கூறி பெருமைப்படுமளவிற்கு பல மருத்துவர்கள், தாதியர்கள், ஆசிரியர்கள், வங்கி உத்தியோகத்தர்கள் எனப் பல்வேறு இடங்களிலும் அவள் உருவாக்கிய மாணவர்களே பணியினைப் புரிகின்றனர்.

கண்மணி ஒவ்வொரு இரவிலும் தூங்காது மணிக்கு ஒரு தடவை எழுந்து கொள்வாள். சுவரிலே தொங்கும் கடிகாரத்தைப் பார்த்துப்பார்த்தே எத்தனையோ இரவுகள் விழித்திருப்பாள்.

**"பிள்ள கண்மணி...கண்கள மூடிக்கொண்டு பேசாம படு பாப்பம், காலையில கெதியா எழும்பணும். முழிச்சிக் கொண்டு இருந்தியண்டா, காலமே எப்படி பிள்ளையளுக்கு படிப்பிப்பா?"...........**
என்ற தாயின் அதட்டலுக்குப் பயந்தே கண்களை மூடிக்கொள்வாள்.......

நாலு மணியானதும் தாயைக் கூட எழுப்பாமல் சுறுசுறுப்பாக அடுப்பை பற்ற வைத்து தேநீரை வைப்பாள். குளிர்ந்த நீரிலே நடுங்கியபடி குளித்து முடித்து, அவசர அவசரமாக தயாராகிக் கொள்வாள். தேநீரை ஊற்றி தாய்க்கும், தங்கைகளுக்கும் கொடுத்து விட்டு, பேரூந்து தரிப்பிடம் நோக்கி புறப்படுவாள்.

**"போய்த்து வாறன் அம்மா!...."**

**"ஆ...கவனமா போய்த்து வா புள்ள.......! "**

ஓட்டமும் நடையுமாக தரிப்பிடத்தை அடைந்து பேரூந்தில் ஏறும்போது இருக்கைகள் அனைத்தும் நிரப்பப்பட்டிருக்கும். நின்று கொண்டே பயணத்தை தொடங்கி, பல இடங்களிலும் இறங்கி. குறுக்குப் பாதைகளில் பல மைல் தூரம் நடந்து பல சோதனைகளையும், வேதனைகளையும் விடிகாலைப் பொழுதில் எதிர்கொள்வது அவளுக்குப் புதிதல்ல.

தினமும் சரியாக ஆறரை மணிக்கெல்லாம் பாடசாலை வளவிற்குள் காலடி எடுத்து வைத்து விடுவாள்.

பாடசாலைக்குள்ளேயும், வெளியேயும் மாணவர்களோடு சேர்ந்து சுத்தமாக்கும் வேலைகளை **"கட கட"** வென்று ... செய்து விட்டு காலைக் கூட்டத்தையும் ஒழுங்குடன் நடத்தி விடுவாள்.

வகுப்பறையில் மாணவர்களுக்கு விளக்கமாக பாடங்களை நடத்தும் அவளுக்கு **"இறைவனால் அளிக்கப்பட்ட கொடை"** என்றே கூறலாம். அவ்வளவு அழகாக கற்பிப்பாள்.
கண்மணி ரீச்சர்!...

ஓம் சேர்... சொல்லுங்க,.....

**"பிள்ளைகளது உயரத்தையும். நிறையையும் பார்த்து கொஞ்சம் குறித்து தருவீர்களா?........"**

**"சரி சேர் ...உடனே செய்து தாறன்........"**
என்று சொல்லி, பம்பரம் போல சுழன்று அக்கணமே செய்து முடிப்பாள்.

அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் முகங்கோணாமல் உதவி புரிவாள். கற்பித்தல் வேலைகள் தவிர பாடசாலைகளில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிலும், இரவு, பகல் பாராது அவள் முழுமையான பங்களிப்பினை ஆற்றுவதில் மகா கெட்டிக்காரி.

இவள் மீது அதிபரும், அனைத்து ஆசிரியர்களும், மாணவர்களும் பெற்றோரும் அதிக மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தனர்.

**"புகையிரத நிலையமாகத் தானிருக்க வேண்டும். ........"** கல்லோயாச் சந்தி, இவ்விடத்தில் எப்படியும் அரைமணி நேரமாவது தாமதிக்கும்.

இந்நிலையில் அவளுக்கு தான் கொண்டு வந்த சாப்பாடு ஞாபகத்துக்கு வர, சோற்றுப்பார்சலினைப் பிரிக்கிறாள். **"தானுண்டு தன் வேலையுண்டு"** என்றிருந்த கண்மணியின் வாழ்க்கையில் யாருடைய கண் பட்டதோ......

**"விதி தன் விளையாட்டைக்காட்டியதோ..........."**

ஒரு வெள்ளிக்கிழமை அன்று மாணவர்களை ஆலயத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று மிக முன்னதாகவே எழுந்து, வேலைகளை முடித்து தயாராகிக் கொண்டு சீக்கிரமாகவே தரிப்பிடத்தை அடைந்து விட்டாள். பேரூந்தில் ஏறிக் கொண்டு. இருக்கை ஒன்று கண்ணில் தென்பட, விரைந்து அதில் அமர்ந்து கொண்டாள். இருக்கை கிடைத்ததில் சந்தோஷத்துடனேயே காணப்பட்டாள். பேரூந்து விரைந்து செல்கிறது.

**"நல்லதோர் வீணை செய்தே**
**அதை நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ**
**சொல்லடி சிவசக்தி"**.........

கண்மணி வாயில் இசை மீட்டிக் கொண்டிருந்தாள்.

**"டமார்'** என்ற ஓசையுடன் **"கிறீச்"** சென்று விறேக் போட்டுக் கொண்டு பேரூந்து நின்று கொண்டது.

**"சத்தம் கேட்ட மாத்திரமே பயணிகள் அனைவருமே காதுகளைப் பொத்திக் கொண்டு, இருக்கைகளுக்கு கீழாக ஒளிந்து கொண்டனர். கண்மணியும் தன் இருக்கையின் கீழே குப்புறப்படுத்துக்கொண்டாள்."** பயத்தினால் அனைவர் முகங்களும் வியர்வையாலும், பீதியாலும் நிரம்பியிருந்தது. நடு நடுங்கிக் கொண்டு இருந்தவர்களிடம், பேரூந்து நடத்துனர் .......

**"பயப்படாதீங்க....... வஸ் டயர் வெடித்ததால அந்தச் சத்தம் கேட்டது. கொஞ்ச நேரத்தில, டயர மாத்தி வஸ்ஸ எடுக்கலாம்."**....... என்று கூறினார்.

கண்மணிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இறங்கி நடந்து செல்ல வேண்டும் போல் இருந்தது. ஆனால் இன்னும் இருபது மைல் செல்ல வேண்டும். போய்ச் சேருவதற்குள் பாடசாலை விட்டு விடும்...

நீண்ட நேரத்தின் பின், தூரத்தே ஒரு பேரூந்து வருவதைக் கண்டு துள்ளிக் குதித்து விட்டாள்.

எவரும் அதைக் கவனிக்கவில்லை. முட்டி மோதிக் கொண்டு. அதில் ஏறுவதிலேயே மும்முரமாயிருந்தனர்.

இவளும் ஓடிச் சென்று , குற்றுயிரும், குறையுயிருமாக ஏறிக் கொண்டு, ஒற்றைக் காலில் நின்று மூச்சு வாங்கினாள். எப்படியும் பாடசாலை செல்ல வேண்டும், என்ற அவாவினால் அப்படி நிற்பது அவளுக்கு கஸ்டமாகப் படவில்லை.

நினைவுகள் அவளை விடவில்லை...துரத்தியது. பாடசாலையை அண்மித்த அவளுக்கு, அங்கே வாயிற்புறமாக பல வகையான வாகனங்கள் வரிசையில் நிற்பதைக் கண்டதும் கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது.

இரண்டெட்டில் அதிபர் அலுவலகத்திற்குள் சென்று விட்டாள். அதிபரைச் சுற்றி, ஏழெட்டுப் பேர் அமர்ந்திருந்தனர். அனைவருமே தெரியாத முகங்கள்.... பெரிய....பெரிய..அதிகாரிகள்... மாகாணசபை கல்வி இலாகாவிலிருந்து வருகை தந்திருந்தார்கள்.

கண்மணி பயத்துடன்..... குரலில் நடுக்கத்துடன்...

**"குட்மோணிங் சேர் !......."**

**"குட்மோணிங்......"** என்ன ரீச்சர் .......இப்ப என்ன நேரம்?

இப்படித்தான் ஒவ்வொரு நாளும் நேரம் பிந்தி வருவதா?".....

என ஓர் அதிகாரி கோபத்துடன் அவளிடம் கேட்டார்.

**"மன்னிக்கணும் சேர்......... அவ அப்படியான ரீச்சர் இல்ல.... எப்பவும் நேரத்தோட வந்திடுவா....இன்று என்ன காரணமோ தெரியாது"** ......... என அதிபர் அவளைக் காப்பாற்றினார். இன்னொரு அதிகாரி ... **" சேர்........ ரீச்சரக் காப்பாற்ற நினையாதீங்க...." "வாங்கிற சம்பளத்துக்கு சரியாக வேலை செய்ய வேணும்" "நீங்க இடம்கொடுப்பதால தான் அவங்க நேரம் பிந்தி வருவதும் ஒழுங்காக வேலை செய்யாததும்...சரி.... கட்டாயம் இதுக்கு நடவடிக்கை எடுக்க வேணும்"**........ என்று சொல்பவைகள் எதுவுமே அவளது காதுகளுக்கு கேட்கவில்லை. **"கடவுளே.... எவருமே காரணம் என்ன வென்று கேட்காமல் ஆளுக்காள் ஏதேதோ கதைக்கிறார்களே ........."** மயக்கம் வந்து கீழே விழாத குறையாக நின்றிருந்தாள்.

**"ஒருவர் ரீச்சர் இது தான் உங்களுக்கு கடைசியும் முதலுமான எச்சரிக்கை .... இனிமேல் நீங்கள் பிந்தி வரக் கூடாது...... வகுப்பிற்குள் செல்லுங்கள்........"** என்று கூறவும் கையெழுத்துப் புத்தகத்தில் கையொப்பம் இட்டுவிட்டு கவலையுடன் வகுப்பறை நோக்கி சென்றாள்..

அவள் வாழ்நாளில் இப்படி யாரிடமும் ஏச்சு வாங்கியதே இல்லை....நாட்கள் சில கடந்தும் கூட அவளால் துக்கத்தில் இருந்து மீள முடியவில்லை. அதிபர் ஆசிரியர்கள் கூட வேதனையடைந்தனர்.

விதி அத்தோடு விட்டபாடில்லை.... அவளுக்கு வேறொரு பாடசாலைக்கு இடமாற்றம்கிடைத்தது. **"தண்ணியில்லாக் காட்டுக்கு அனுப்புவது"**... போல படிப்பு வாசனையே இல்லாத ஒரு கிராமத்து பாடசாலைக்கு இடமாற்றம் கிடைத்தது. சந்தோசமாக அவள் அதனை ஏற்றுக் கொண்டாள். ஆனால் அதிபர். ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவருமே **"நல்ல ஒரு ஆசிரியை எமது பாடசாலை இழக்கின்றதே" என்று கதறி அழுதார்கள்."**

பல வருடங்கள் கழித்து. அவளது புகழ் எங்கும் பரவியது. மாகாண சபை கல்வி இலாகா வரை அவள் திறமை கொடி கட்டிப் பறந்தது. பதவி உயர்வுகள் அடுக்கடுக்காய் கிடைத்தது. கண்மணி பல்வேறு அபிவிருத்திப் பணிகளையும் அக்கிராமத்து மக்களுக்கு ஆற்றினாள். பழக்க வழக்கங்களை மாற்றியமைத்தாள்.

**"இந்தப் பாடசாலை மாணவர்களின் கல்வித் தரத்தைக் கூட்டி ஒரு மாணவரையாவது புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறச் செய்ய வேண்டும். ..."** என்று கங்கணங் கட்டிக் கொண்டு தீவிரமாக கற்பித்தல் முயற்சிகளை மேற் கொண்டாள்.....

அவள் காட்டிய ஊக்கத்திற்கு, அம்மக்களாலும், பிள்ளைகளாலும் கல்வியில் தங்களால் முடிந்த அளவிலேயே செயற்பட முடிந்தது. படிப்படியாக முன்னேறி வரும் மக்களாகையால் இனிமேல் தான் கல்வியின் மகத்துவம் அறிந்து செயற்பட வேண்டும்.

காலம் தான் விட்டு வைக்குமா?.... அவளுக்கு வேலை கிடைத்தது நேற்றுப் போலுள்ளது. இருந்தும் கட்டாயம் ஓய்வு பெற்றே, ஆகவேண்டிய நிர்ப்பந்தத்தினால் விருப்பமில்லாமல் ஓய்வு பெற்றாள்.

கண்மணி தான் சேவை புரிந்த பாடசாலைகளையும், அங்கு அவளுக்கு ஏற்பட்ட அனுபவங்களையும், நினைத்துப் பெருமைப்படுவாள்.

கடைசியாகக் கடமையாற்றிய கிராமப்பாடசாலையில் உள்ள மாணவர்களை எவ்வளவோ கஷ்டப்பட்டு முன்னேற்றினாள். அவள் மனதில் உள்ள விருப்பத்தினை கூடிய விரைவில் அவ்வூர் மக்களும். மாணவர்களும், ஆசிரியர்களும் கட்டாயம் நிறைவேற்றி விடுவார்கள். அப்புகழ் கண்மணியையே சாரும்.

இன்று அவள் சிறந்த ஆசிரியப் பெண்மணி என்ற பாராட்டைப் பெறுவதற்காய் கொழும்பை நோக்கி இனிய பாடசாலை நினைவுகளுடன் சென்று கொண்டிருக்கிறாள். .... **"இவளைப் போன்று இன்னும் எத்தனை கண்மணி ஆசிரியர்கள் இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்களோ"?**

புகையிரதத்தில் அமர்ந்திருந்தவர்கள், கலைந்திருந்த தலைமுடிகளை கைகளால் நீவி விடுவதும், முகங்களை கைக்குட்டையால் துடைப்பதும், பிரயாணப் பொதிகளை கீழிறக்குவதுமாக இருந்தார்கள். கண்மணியும் தன் பாடசாலை நினைவுகளை களைந்து விட்டு தன்னை சீராக்குகிறாள். பிரயாணப் பையினை எடுத்துக் கொண்டு தயாராக நிற்கிறாள்.


புகையிரதம் கொழும்புக் கோட்டையில் தரித்து நின்றது. புகையிரதத்தை விட்டிறங்கி, புன்னகையோடு, கம்பீர நடையுடன் விழா மண்டபத்தை சென்றடைய புறப்படுகிறாள் கண்மணி.

**யாவும் கற்பனையே!**

# தென்றலின் பார்வையில்








கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் காணி, காணி அபிவிருத்தி, விளையாட்டுத்துறை அமைச்சு நடாத்திய கிழக்கு மாகாண இலக்கிய விழா அண்மையில் மட்டக்களப்பு மகாஜனக்கல்லூரியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் **"முதலமைச்சர் விருதினை"** **"தென்றல்"** ஆசிரியர் பீட உறுப்பினர் கலாபூஷணம் ஆறுமுகம் அரசரெத்தினம் மற்றும் **"தென்றல்"** சஞ்சிகை எழுத்தாளர் திருமதி.அசோகாம்பிகை யோகராஜா ஆகியோருக்கு வழங்குவதையும், **"தென்றல்"** சஞ்சிகை எழுத்தாளர் ஆ.மு.சி. வேலழகனுக்கு **"செங்கமலம்"** கவிதை நூலுக்காக இலக்கிய நூல் பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

**படமும் - பதிவும்**

- ரவிப்ரியா -




# தெட்டத் தெளிவான தெள்ளமுதாய் தென்பூட்டுகின்றது 'தென்றல்'

இந்த இதழில் எங்கள் பார்வை தென்றலின் 15வது இதழ் வெளியீட்டுச் சிறப்பு விழாவில் பதிகின்றது.

ரீன் ஏஜ் பருவத்தில் நிற்கிறது தென்றல். நாளுக்கு நாள் நல் வளர்ச்சி. ஆக்க இலக்கிய வாதிகள் அதிசயிக்கும் வகையில் தென்றலின் வீச்சு செம்மையாகி செந்தமிழின் செல்லப் பிள்ளையாய், சென்ற இடமெல்லாம் தவழ்கின்றது.



ஆசிரியர் விழாவில் தலைமை யுரையில் குறிப்பிட்டது போல் ஆரம்ப அச்சங்கள், விமர்சனங்கள் ஏன் அவதூறுகளைக் கூட படிக்கல்லாக்கி பண்பட்ட பசுமையான பைந்தமிழ் சிற்றிதழாக மாவட்டம் கடந்த மௌசுடனும், வனப்புடனும் வலம் வருகின்றது.


அன்று ஏளனம் செய்தவர்கள், எதிர்த்தவர்கள் எல்லாம் ஏற்றுக் கொள்ளும் படி 'தென்றல்' என்ற இலக்கியத் தேரை வடம் பிடித்து வாழ்த்துச் சொல்லி, இழுத்துச் செல்ல இஷ்டப்பட்டு இணைகின்றவர்கள்

நிறையவே இருக்கின்றார்கள் என்பது தென்றலின் பெருமைக்கு சான்றாக அமைகின்றது.

ஆன்றோர் ஆசீர்வதிப்பர் பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க வென்று, பதினைந்து பிரசவங்கள் பார்த்தாயிற்று. 16வதும் கருக்கட்டியாயிற்று. சுகமான அந்த பிரசவத்தை எதிர்பார்க்கின்ற இந்த இனிய வேளையிலே பதினைந்தாவது தென்றலின் பருவத்தைப் பார்த்து பரவசம் கொண்டவர்களாக மட்டக்களப்பு பொதுநூலக கேட்போர் கூடத்தை பார்வையாளர்கள் குறிப்பாக இலக்கியத்தோடு இரண்டறக் கலந்தவர்கள் அலங்கரித்திருந்தார்கள். முற்றத்து மல்லிகைகளாக அவர்கள் முகம் மலர்ந்திருந்தார்கள்.

அடுத்த வீட்டு மல்லிகைக்கு கௌரவம் கொடுக்கும் மட்டக்களப்பின் மாண்பிற்கமைய அழைக்கப்பட்டிருந்த மூன்று முக்கிய அதிதிகளினதும் பிரசன்னம் பிழைத்தது. மூத்த இலக்கிய வாதிகளை முகம் சுளிக்க வைத்ததையும், வெளியூர் அழகனை விட உள்ளூர் முடவன் சிறந்தவன் என்ற முதுமொழியையும் முக்கிய பேச்சாளர் ஒருவர் முன்மொழிந்ததையும் அவதானிக்க கூடியதாக இருந்தது.


எமது மாவட்டத்தில் புகழ் பூத்த இலக்கியவாதிகள் பலர் இருக்கும்போது, எங்களிடம் பற்றாக்குறை என பறை சாற்றியதுபோல் இருந்தது இந்த ஏற்பாடு. இலக்கிய மேடைகள் அமைப்போர் .இனிமேல் இது பற்றிச் சிந்தித்து செயற்படுவதற்கு இதைச் சிறந்த உதாரணமாக கொள்ள வேண்டும்.



இவ்விழா ஏற்பாட்டாளர்கள் அகல்விளக்குகளை வைத்து, முக்கியஸ் தர்களைக் கொண்டு ஒளியேற்றி விழாவை ஆரம்பித்தமை சிறப்பாக இருந்தது.

அத்துடன் தென்றலுக்கென ஒரு பாட்டை கலாபூஷணம் ஆ.அரசரெத்தினம் இயற்றிக் கொடுக்க, அதற்கு சிறந்த மெட்டை சிவானந்தா சங்கீத ஆசிரியை அமைத்துக் கொடுக்க, சிறந்த மெல்லிசையுடன்,




புருஷோத்தமன் என்ற இளம் தென்றல் பாட, அதற்கான இறுவெட்டை எமது மூத்த முதுபெரும் எழுத்தாளர். அன்புமணி ஐயா வெளியிட்டு வைத்தது நிகழ்வின் சிகரமாக அமைந்தது.

அத்தோடு புருஷோத்தமனை கௌரவித்தது எமது பண்பாட்டின் அடையாளமாகவும் அமைந்தது. கலாபூஷணம் அரசரெத்தினம் அவர்கள் தன் மாலையை அந்த இளைஞனுக்கு அணிவித்து கௌரவித்தது அவரின் பெருந்தன்மையை வெளிப்படுத்தியதுடன், அவரின் இதயம் திறந்த இயல்பான ஊக்குவிப்பாகவும் அமைந்தது.

15வது சிறப்பிதழை மட்டக்களப்புத்தமிழ்ச் சங்கப்பொருளாளர் ரஞ்சிதமூர்த்திக்கு தொல்லியல் ஆய்வாளர் செல்வி தங்கேஸ்வரி, ஆசிரியர் கிருபாகரன் சகிதம் வழங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து முக்கியஸ்தர்கள் அனைவருக்கும் இதழ் பெற சந்தர்ப்பமளிக்கப்பட்டது.




வரவேற்புரை நடாத்திய கலாபூஷணம் அரசரெட்ணம் **"தென்றல் அடிக்குது என்னை மயக்குது தேன்மொழியே இந்த வேளையிலே"** மற்றும் **"அசைந்தாடும் தென்றலே தூது செல்லாயோ, தேனமுதுதான கவி பாடி சேதி செல்லாயோ"** என்ற இலக்கிய நயம் செறிந்த அந்த நாள் சினிமாப் பாடல்களை தெரிந் தெடுத்து. இந் நிகழ்விற்கு பொருத்தமாக அதை ஒப்பு வித்தது மிகவும் சிறப்பாக இருந்தது.

இலக்கியத்துறையையும் தலை நிமிர வைத்தது.

கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் இடம்பெற்ற உலகத் தமிழ் சிற்றிதழ் சங்க 6வது மாநாட்டில் **'தென்றல்'** - கலை இலக்கியத் துறையில் சிறப்பாக பணி புரிந்தமைக்காக **'மணவாளன்'** இலக்கியவிருது வழாங்கி கௌரவிக்கப்பட்டமை. இதுவே ஆசிரியர் வெளியிட்ட அருமையான தகவலாகும்.

பேராசிரியர் செ. யோகராசா **"தென்றல்"** மீது பரந்துபட்ட கண்ணோட்டத்தைச் செலுத்தி கிழக்கின் சஞ்சிகை போக்குகளும், தென்றலின் பங்களிப்பு பற்றியும் ஆழமான ஒரு ஆய்வுரையை நிகழ்த்தினார்.

**'தென்றல்'** பல்சுவை குடும்ப சஞ்சிகை என்ற தென்றலின் வெளிப்பாடு பற்றியும் சிலாகித்தார். இதில் பலமும் உண்டு. பலவீனமும் இருப்பதாகவே தெரிவித்தார். எனினும் தென்றலின் தனித்துவம் தென்படவே செய்கின்றது என்று குறிப்பிட்டார்.


தொல்லியல் ஆய்வாளர் செல்வி க. தங்கேஸ்வரி, முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர்




எஸ்.எதிர்மன்னசிங்கம் ஆகியோர் உரையாற்றும் போதே **"தென்றலை"** வெகுவாகப் பாராட்டியதுடன் அதன் சிறப்புக்கள் பற்றியும் வெளிப் படுத்தியதுடன், இந்த அரிய முயற்சி இடைநடுவில் நிற்காது தொடர வேண்டுமெ னவும், விரைவில் மாதாந்த சஞ்சிகையாக வெளிவர வேண்டுமெனவும் ஆசீர்வதித்தனர்.

அத்தோடு செல்வி க. தங்கேஸ்வரி **"தென்றல்"** ஆசிரியரை நிகழ்வில் இல்லாத நிகழ்வாக தனது சுய விருப்பில் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தமையை இங்கு விஷேடமாகக் குறிப்பிடலாம்.

அவர் தனது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-



**"தென்றல்"** ஆசிரியர் தன்னோடு சிலரை இணைத்துக் கொண்டு வெளியிட்டு வருகின்றார். இந்நிலையில் நாங்கள் ஒன்று கூடி எங்களுடைய கலையாக்கத்தை முன்னெடுக்க உறுதி பூணுவோம்.

இவற்றோடு மட்டக்களப்பில் நடைபெறும் இலக்கிய விழாக்களில் நடைபெறும் இலக்கிய வாதிகளைத் தவிர்த்து அரச உத்தியோகத்தர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் நிலைமை பற்றி தனது அதிருப்தியைத் தெரிவிக்கவும் அவர் தவறவில்லை.

அத்தோடு **"தென்றல்"** சஞ்சிகை நடாத்திய குறுக்கெழுத்துப் போட்டி மற்றும் மாணவர்களுக்கான கவிதைப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களும் அதிதிகளால் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் செங்கதிர் ஆசிரியர் கோபாலகிருஷ்ணன், சுவைத்திரள் ஆசிரியர் திக்கவயல் தர்மகுலசிங்கம், வைத்திய கலாநிதி எம். அருளானந்தம், கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ், கவிஞர் வாசுகி குணரெத்தினம், ஊடகவியலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நாட்டாரியல் (Folk Fore) ஓர் ஆய்வு

கலாபூசணம் ஆரையூர் அருள்

**1.** டாக்டர்.க.சக்திவேல்:- **"ஒரு நாட்டு மக்களின் நாகரீகத்தின், பண் பாட்டை, பழக்கவழக்கங்களை, வரலாற்றை, நாட்டுநடப்பை உண்மை யான முறையில் படம் பிடித்துக் காட்டுவதே நாட்டாரிலக்கியமாகும்".**

**2.** சங்கர் சென்குப்தா (கல்கத்தா நாட்டாரியல் சஞ்சிகை) குறிப்பிடுகையில் **"கிராமிய மக்களின் அனுபவத்தின் பொக்கிஷம் மனிதனோடு மனிதனை அது நேரடியாக மட்டுமல்லாது இதயத்தோடு இதயத்தைப் பிணைத்து வைக்கின்றது. அவர்களது தனித்தன்மையைக் குலைக்காது ஒற்று மையை வளர்க்கின்றது. இயற்கையோடு இயைந்து வாழும் சமூகத்தின் ஒட்டு மொத்தமான அல்லது தனிப்பட்ட உணர்ச்சிகளைப் பிரதிபலிப் பதே நாட்டாரிலக்கியமாகும்"** என்கிறார்.

**3.** வே.அந்தனிஜான் அழகரசன் (நாட்டாரியல் ஆய்வாளர்) கூறுகையில் **"எழுத்து வாசனையறியா மக்களினால் பாடப்பட்ட வாய்மொழி இலக்கியம் ஒரு நாட்டின் நாகரீகத்தை, பண்பாட்டின் மேம்பாட்டை அறிவதற்கு உதவி செய்யும் கருவிகளுள் நாட்டாரியலும் ஒன்றாகும்"** எனக் குறிப்பிடுகிறார்.

**4.** A New English Dictonary சொல்கிறது **"மரபு வழிப்பட்ட நம்பிக்கைகளையும், புராணங்களையும், பழக்கவழக்கங்களையும் பொது மக்களிடமிருந்து அறிந்து கொள்வதும் அத்துடன் பண்டையகாலப் பழக்கவழக்கங்களையும் பொது மக்களின் இலக்கியங்களை கற்பதும் நாட்டாரியலாகும்"** என்கிறது.

**5.** அறிஞர் ஔரலியோ எம்.எஸ். பினோசா சுட்டுகையில் **"நாட்டாரியலானது மனித சமுதாயம் எதை அனுபவித்ததோ, எதைக்கற்றதோ, எதைப் பயிற்சி பெற்றதோ அவற்றைக் குவித்து வைத்திருக்கும் சேமிப்பு அறையாகுவது நாட்டாரியலாகும்"** என்கிறார்.

**6.** திரு.அன்னாகாமு குறிப்பிடுகையில் **"நாட்டாரியல் எளியவை, பகட்டில் லாதவை, பொய்க்கலப்பற்றவை, நேரானவை, உள்ளத்தை ஈர்க்கும் இனிமையும், இசையொலியும் நிறைந்தவை, செழுமை மிக்க மனோபலமும், கற்பிக்கப்படாத கட்டுப்பாடற்ற கற்பனையும் நிறைந்த களஞ்சியங்கள், தீங்கற்ற கலைக் கருவூலங்கள் என்றே அவற்றைக் கூறலாம்"** என்கிறார்.

**7.** ஆர்.அய்யாசாமி நாட்டாரியல் பற்றி **"உலகெங்கிலுமுள்ள நாட்டாரியலை ஊன்றிப் பார்த்தால் வால்மீகி, கம்பன், இளங்கோ, காளிதாசன், சேக்ஷ்பியர், மில்டன், வேோர்ட்ஸ்வொர்த், தாகூர் போன்ற உலகக் கவிஞர்களின் உள்ளங்களில் கவிதை வித்திட்டு அவர்களின் கவிதை எழில் செழிக்க உரமானது என்பதை உணரலாம்"** எனக் குறிப்பிடுகிறார்.

**8.** எஸ்.முத்துமீரான் **"நாட்டாரியல் ஒரு மொழியானது வரிவடிவம், இலக்கியம், இலக்கணம் இவற்றை பெறுவதற்கு முன்பு, எழுத்தறிவில்லா ஏழைக் கிராமத்து மக்களிடம் வாய்மொழியாக வழங்கிவரும் நீண்ட வரலாற்றினை உடையனவாகும். வாய்மொழி இலக்கியத்திற்கும், எழுத்து வடிவேற்ற செம்மொழி இலக்கியத்திற்கும் அசைக்க முடியாத ஆழமான தொடர்புண்டு. அறிஞர்கள், ஆய்வாளர்கள், நாட்டாரியலைத் தாயென்றும், எழுத்திலக்கியத்தைச் சேயென்றும் வருணிப்பார்கள்"** என்கிறார்.

**9.** உலகக் கலைக்களஞ்சியமானது **"நாட்டாரியல் நாட்டுப்புற மக்களின் மரபு வழிப்பட்ட கலைகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், புராணங்கள் ஆகியவற்றை ஆராய்வதாகும்"** என்கிறது.

மேற்போந்த அறிஞர்களின் வரைவிலக்கணங்களை தொகுத்து நோக்குங்கால் நாட்டாரியல் என்பது மனித இனத்தின் கலை, கலாசார, பண்பாட்டு, விழுமியங்களை பிரதிபலித்துக் காட்டுகின்ற காலத்தின் அடியாகத் தோன்றிய வாழ்வியல் பொக்கிஷங்களாகும் என்பது தெளிவு.

இத்தகு செழுமைமிக்க நாட்டாரியலின் கூறுகளாக உள்ளடங்கி மிளிர்வனவாக நாட்டார் பாடல்கள், நாட்டார் கதைகள், நாட்டார் கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் முதலியவற்றை முக்கிய கூறுகளாக அடையாளம் கண்டுகொள்ள முடிகின்றது.

நாட்டுப்புறவியல் துறையைப் பொறுத்தவரையில் ஆழமானதும், அகலமான பரந்துபட்ட துறையாக அமைந்துள்ளது. இந்தவகையில் நாட்டாரியல் பற்றிய ஆய்வு முயற்சியிலான இக்கட்டுரைப் பார்வையானது பின்வரும் தளங்களில் நின்றும் விரிய முனைகிறது.

1. நாட்டாரியலில் நாட்டார் பாடல்களின் பங்களிப்புக் குறித்த பார்வை.
2. நாட்டாரிலக்கியங்களில் பழமொழிகளின் வகி பாகம்.
3. நாட்டாரிலக்கியங்களில் ஒன்றான விடுகதைகள் பற்றிய நோக்கு.
4. நாட்டாரியல் நாட்டார் கதைகளின் பங்கு.
5. நாட்டார் வழக்காற்றியலும், கதைப்பாடல்களும் பற்றிய பார்வை

**-தொடரும் -**

# கலைகளுக்கெல்லாம் அரசு கவிதை

- ஆ.மு.சி.வேலழகன்-

அன்பார்ந்த வாசகர்களே! நாம் **"கலைகளுக்கெல்லாம் அரசு கவிதை"** எனும் தலைப்பில் கடந்த இரண்டு, மூன்று மாதங்களாக நான் எழுதிவரும் தொடரின்படி கடந்த **"தென்றல்"** இதழிலே **"தளை"** என்பதை மேலெழுந்த வாரியாகக்கூறி, அந்தத் தளைவிடயத்தை சற்று நிறுத்தி அதனையடுத்து வரும் **"அடி"** எனும் பொருளையும் அதன் பின்வரும் **"தொடையெனும்"** பொருளையும் முடிந்தவரை புரிந்து கொண்டதன் பின் **"தளை"**யெனும் பொருளைத் தொடர்வோம் என்று குறிப்பிட்டிருந்தேன். அதன்படி **"அடி"** என்றால் என்ன என்பதை அறிவோம்.

ஒரு கவிதையை எழுத எண்ணும் கவிஞர் ஒருவருக்கு தான் முதலில் தன் மொழியில் உள்ள எழுத்தைப் பற்றியும் எழுத்துக்கள் இணைந்து வரும் அசைகள் பற்றியும், அசைகள் இணைந்து வரும் சீர்கள் பற்றியும் சீர்கள் இணைந்து வரும் அடிகள் அது போல் அந்த அடிகளால் உருவான கவிதைக்குள் பொதிந்துள்ள **"தொடை"** (அழகு) அதாவது உவமை, உருவகம், ஓசை போன்றவை பற்றியும் ஓரளவாவது அறிந்திருக்க வேண்டும் என்ற அடிப்படையில் முதலில்:-

1. எழுத்து 2. அசை 3. சீர் 4. தளை 5. அடி
6. தொடை என்பன தெரிந்திருக்க வேண்டும் என்பது மரபாம்.

## அடி

அடியென்பது பல சீர்களால் அமைந்த பாட்டிற்கு அல்லது கவிதைக்கு உறுப்பாய் அமைவதாம். அதேநேரத்தில் அடி என்பது வேறு. வரி என்பது வேறு. ஓர் அடியை ஒரு வரியிலும் எழுதலாம். ஒன்றுக்கு மேற்பட்டவரிகளிலும் எழுதலாம்.

எ.கா: **"முன்னம்நின் அன்னை முலையூட்டி**
**மையிட்டு மூக்கும் சிந்தி"**

இந்தக் கவிதையானது ஐந்து சீர்களைக்கொண்ட ஒரு அடி. ஆனால் இதனை இருவரியிலே எழுதிக் காட்டினாலும் இது ஓரடியாகும்.

மேலும் இந்தக் கவிதையை முற்றாக எழுதுகிறேன் கவனியுங்கள்.

**"முன் னம் நின் அன்னை, முலையூட்டி**
**மையிட்டு, மூக்கும் சிந்தி**
**கன் னமும், கிள்ளிய, நாளல்ல**
**வேஉன்னைக், காப்பதற்கே**
**அன் னமும், மஞ்ஞையும், போலிரு**
**பெண்கொண்ட, ஆண்பிள்ளைநீ**
**இன் னமும், சின்னவன், நானோசெந்**
**தூரில், இருப்பவனே!"**

இந்தக் கவிதை நான்கு அடிகளில் வந்துள்ளது. ஆனால். இதனை எட்டு வரிகளில் எழுதியுள்ளனர். எனவே; எட்டு வரிகளில் எழுதப்பட்டுள்ள இக் கவிதையை நாம் நான்கு அடிக்கவிதை தான் என்று எப்படி இனம் காண்பது? ஆம்!

இதனை இனம் காணும் வழி கவிதையின் முதல்அடியில் வரும் முதல் எழுத்துடன் என்ன எழுத்து இனம் இணைந்து வந்ததோ அந்த வகையான எழுத்தினம் தொடர்ந்து ஒவ்வொரு அடிக்கும் வரும் பட்சத்திலே நாம் அடியை இனம் காணமுடியும். மேலும் இக்கவிதையின் ஒவ்வொரு நான்கு அடிகளிலும் தொடக்கத்தில் **"முன், கன், அன், இன்"** என்று வந்திருக்கின்றன.

இதனை நாம் கவிதையின் இலக்கணத்தில் **"எதுகை"** என்று அழைப்போம். ஓரெழுத்து ஒன்றிவருவது எதுகையாகும். இதனை நாம் பின் தெரிந்து கொள்ளலாம். இந்த எதுகையை தடித்த எழுத்துக்களில் காட்டியது போல் மேலே உள்ள கவிதையின் ஒவ்வொரு அடியிலும் முறையே ஐந்து ஐந்து சீர்களும் அமைந்து வந்துள்ளது. இதனையும் நீங்கள் இலகுவாகப்புரிந்து கொள்ளும்படி ஒவ்வொரு சீரினையும் சற்று இடைவெளிவிட்டும் **"கமா"** குறியீடு இட்டும் காட்டியுள்ளேன். இதனைக் கொண்டும் ஒரு அடியில் எத்தனை சீர்கள் வந்துள்ளன என்பதையும், அந்தச் சீர்களை கொண்டே நான் கீழே குறிப்பிட்டுள்ள அடிகளின் பெயரையும் யாரும் சொல்லாமலே நீங்கள் இனம் காணமுடியும்.

அன்பார்ந்த வாசகர்களே! எமக்கு எதிலும் ஆர்வமும், அக்கறையுமிருந்தால் இவையொன்றும் புரியல்ல என்று தட்டிக்கழிக்காமல் புரிந்துணர்ந்து செயற்படலாம். இதனைவிடவும் இலகுவாக விளங்கப்படுத்து வதானால் அதனை நேரடியாகத்தான் விளங்கப்படுத்தலாம். ஆனால் முயன்றால் முடியாதது எதுவுமில்லை. அடுத்து விடயத்திற்கு வருவோம்.

ஆம்! ஒருபாட்டில் அல்லது கவிதையில் வரும் **"அடியில்"** எத்தனை சீர்வருகின்றதோ அங்குவரும் சீர்களைப் பொறுத்து அந்த அடிகளுக்கு ஒவ்வொரு பெயர்களும் உண்டு.

எ.கா: இரண்டு சீர்களில் ஒரு அடிவந்தால், அந்த அடிக்குக் குறளடி என்றும், மூன்று சீர்களில் ஒரு அடி வந்தால் அதற்குச் சிந்தடியென்றும், நான்கு சீர்களில் ஒரு அடிவரின் அதனை அளவடியென்றும், ஐந்து சீர்களில் ஒரு அடிவந்தால் அதனை நீண்ட நெடிலடியென்றும், ஐந்து சீர்களுக்குமேல் வரும் அடிகளை மூங்கிலைப்போல் (கழி) நீண்ட கழிநெடிலடியென்றும் கூறுவர்.

1. குறளடி 2 சீர்களிலே இருக்கும்.
2. சிந்தடி 3 சீர்களிலே இருக்கும்.
3. அளவடி 4 சீர்களிலே இருக்கும்.
4. நெடிலடி 5 சீர்களிலே இருக்கும்.

கழிநெடிலடி 5 சீர்களுக்கு மேற்பட்டுச் சீர்கள் வருவதுண்டாம். இந்த ஐந்து சீர்களுக்குமேல் வரும் மூங்கிலைப்போல் நீண்ட அடிகளைக் **"கழி"** நெடிலடியென்றே அழைக்கவேண்டுமாம். மாறாக கழி **"ல்"** என்று ஒற்றினைச் சேர்த்துக்கூறக்கூடாதாம்.

இடையில் பாரதியின் பாஞ்சாலி சபதத்தின் **"பிரமதுதி"** கவிதையடிகளைத் தொட்டுக்காட்டுகிறேன். முன்பு நீங்கள் படித்திருப்பீர்கள். மேலும் படித்து இன்புறுங்கள்.

**நொண்டிச்சிந்து**

**"ஓமெனப் பெரியோர்கள் - என்றும்**
**ஓதுவதாய் வினைமோதுவதாய்**
**தீமைகள் மாயப்பதுவாய் - துயர்**
**தேய்ப்பதுவாய் நலம் வாய்ப்பதுவாய்**
**நாமமும் உருவம் அற்றே - மனம்**
**நாடரிதாய்ப்புந்திதேடரிதாய்,**
**ஆமெனும் பொருளனைத்தாய் - வெறும்**
**அறிவுடன் ஆனந்த இயல்புடைத்தாய்**
**நின்றிடும் பிரமம் என்பார் -அந்த**
**நிர்மலப் பொருளினை நினைத்திடுவேன்**
**நன்று செய்தவம் யோகம் - சிவ**
**ஞானமும் பக்தியும் நணுகிடவே**
**வென்றிகொள் சிவசக்தி - எனை**
**மேவுறவே இருள் சாவுறவே**
**இன்தமிழ் நூலிதுதான் - புகழ்**
**ஏய்ந்தினி தாயென்றும் இலங்கிடவே"**

**-தொடரும்-**

# கொடூரங்களின் உலகம்

- லி.ரிகரன், களுதாவளை -

பிஞ்சு மரத்தில் வண்டில் செய்து
பெரியவர்கள் பிழைக்கிறார்கள்
கஞ்சிக்கு உழைக்காத சோம்பேறிக் கூட்டமொன்று
வஞ்சியரின் உழைப்பில் வயிறு கழுவுகிறது
வரட்சி நிலத்தில் வட்டி மரம் நட்டு
பட்டி தொட்டியெல்லாம் சொத்து சேர்க்கிறார்கள் பாதகர்கள்
சிற்றரசர்கள் சிக்கனத்தில் சேகரிப்பதை
வல்லரசுகள் வாரி சுருட்டுகிறது வளத்தோடு
நிறைவான வேலை வாங்கி விட்டு
குறைவான கூலி கொடுக்கிறார்கள் முதலாளிகள்
ஒரு பூவில் பல வண்டமர்ந்து ஒருங்கே
தேனருந்தி சொல்கிறது பூக்களை
இனம் இனமென்று மனமில்லாதோரால் ஆக்கப்படும்
சாதி சன சண்டைகளால் பிணக்குவியலாகிறது
உப்பிலும் கலப்படம் காற்றிலும் கலப்படமாகிட
இயற்கையின் கோபத்தை சீண்டி செய்வதறியாது
திகைத்து நிற்கிறது செயற்கை
அசரீரி ஒலித்து செல்கிறது
அகிலத்தின் தலைப்பு செய்திகள் தான்
அறிய முடியவில்லை ஒலிக்குறிப்பு மொழி தனை
ஊகித்து பார்க்கையில் - ஐயோ!
உலுக்கும் பயங்கரங்கள்.

- பேராசிரியர். செ.யோகராசா -

# மாணவர்களே! சிறுகதை எழுதுவோம் வாருங்கள்!

சிறுகதையின் ஆரம்பம் எவ்வாறு முக்கியமானதாக அமைந்துள்ளதோ அவ்வாறே சிறுகதையின் **"முடிவு"** எவ்வாறு அமைய வேண்டுமென்பதும் முக்கியமானதொரு விடயமாகின்றது. இளம் எழுத்தாளர்களுக்கு தாம் எழுதிய சிறுகதையை எப்படி முடிப்பது என்பதும் கடினமான விடயமாகவே காட்சி தருகின்றது.

சிறுகதை எழுத ஆரம்பிக்கின்ற போதே அதன் **"முடிவு"** பற்றிய தெளிவு - உறுதி - எழுத்தாளருக்கு சிந்தனையில் ஏற்பட்டுவிட வேண்டும். ஏனெனில் முடிவு என்பதனை நோக்கிய பயணமே **"சிறுகதை"** ஆகின்றது.

சிறுகதையின் **"உச்சம்"** என்பதற்கும் முடிவு என்பதற்கும் நெருங்கிய தொடர்புள்ளது. சில சிறுகதைகளிலே உச்சமும் முடிவும் நன்றாயிருத்தல் கூடும். எனினும் பல சிறுகதைகளில் அது **"முடிவு"** என்பதனைச் சார்ந்து அமைகின்றது. ஆகவே **"முடிவு"** என்பது ஓரிரு வாக்கியங்களில் அமைந்திருக்க வேண்டும். சிறுகதையைப் பொறுத்தவரையில் சொற்செறிவு அல்லது சொற்செட்டு முக்கியமானது என்பர். அவ்வாறெனில் **"முடிவு"** பகுதியிலும் அத்தகைய சொற்செறிவு காணப்படவேண்டும். உதாரணமாக காதல் பற்றிய சிறுகதை ஒன்றில் காதலுக்கான தடை நீங்கியவுடன் அதுவே முடிவாக அமையவேண்டும். அதற்கு பின்பு எழுத்தாளர் அது பற்றி எதுவுமே எழுதுவதற்கில்லை. காதல் பற்றி எழுதப்பட்ட சிறுகதையொன்றிலே எழுத்தாளரொருவர் இப்படி ஒரு முடிவை அமைத்துள்ளார். குறிப்பிட்ட நேரத்திற்குள் காதலி இருக்குமிடம் சென்று காதலன் தன் முடிவைக் கூறிவிடவேண்டும். இல்லாவிடில் காதல் முறிந்துவிடும். காதலன் அவளைக் காணச்செல்கின்றான். வழியில் போக்குவரத்து நெரிசல். அவன்போக இயலவில்லை; காதல் முறித்துவிடுகின்றது. இந்த உச்சகட்டத்திற்கு பின் முடிவில் அவளது தந்தைதான் கார்க்காரர்களுக்கு இலஞ்சம் கொடுத்து அத்தகைய நெரிசலை உருவாக்கினார் என்பது வெளிப்படுகிறது. இத்துடன் சிறுகதை முடிந்துவிடவேண்டும். ஆனால், அவ்வெழுத்தாளரோ எந்தக் கார்க்காரருக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்று பட்டியல் போடுகின்றார். இத்தகைய **"முடிவு"** காரணமாக உச்சகட்டத்திலே கிடைக்கும் உணர்வெழுச்சியும் முடிவில் கிடைக்கும் அதிர்ச்சியும் வாசகருக்குக் கிடைக்காமல் போய்விடுகின்றது!

சிறுகதையின் முடிவைக் கோடிகாட்டினால் போதும். வாசகரை வாசிக்கத் தூண்டினால் - சிந்திக்க தூண்டினால் அது போதும்.

சிறுகதையின் **"முடிவு"** என்பதனை ஆய்வாளர் சிலர் இரண்டாக வகைப்படுத்துவர்.

(1) கருவுக்கேற்ற முடிவு (11) ஆசிரியரது கருத்திற்கேற்ற முடிவு என்பனவே அவை.

கருவுக்கேற்ற முடிவு என்பதற்கு கி.ராஜநாராயணனின் சிறுகதை முடிவு ஒன்றினை எடுத்துக்கூறலாம். **"வேலை வேலையே வாழ்க்கை"** என்ற தலைப்பில் அவரெழுதிய சிறுகதையொன்றிலே காலையிலிருந்து மாலைவரை உழைக்கும் மனைவியைப் பார்த்து கணவன் வியப்பது சிறுகதையின் கரு. அச்சிறுகதையின் முடிவு இவ்வாறமைகின்றது.

**"அந்தக் கணத்தில் அவருக்கு பளிச்சென்று மனசில் ஒன்று தட்டுப் பட்டது. நாம் வேலை வேறு வாழ்க்கைவேறு என்று நினைக்கிறோம். இவ்வேளை வேலையே வாழ்க்கையாக விளங்குகின்றாள். தன் அருகே தலைசாய்த்து தன் மனையாட்டியை இறுகப்பற்றி முகர்ந்தார். பூசும் பொடியோ சோப்பு வாசனையோ முதலிய எதுவும் இன்றிச் சுயமான தனி மனுஷி வாடைதான் அவளிடம் இருந்தது."** மேற்கூறிய முடிவு சிறுகதையின் கருப்பொருளை புலப்படுத்துகிறது.

**"ஆசிரியர் கருத்திற்கேற்ற முடிவு"** என்பது ஆசிரியர் தனது நோக்கில் ஒரு கருத்தை வெளிப்படுத்தி முடிப்பதனைக் கருதுகின்றது. புதுமைப்பித்தனின் சிறுகதைகள் பலவும் இத்தகையனவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. பொன்னகரம் என்ற அவரது பிரசித்திபெற்ற சிறுகதை பின்வருமாறு முடிகின்றது.

**"இருவரும் இருளில் மறைகிறார்கள். அம்மாளு<br>முக்கால் ரூபாய் சம்பாதித்து விட்டாள். ஆம்<br>புருஷனுக்குப் பால் - கஞ்சி வார்க்கத்தான்.<br>என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே!<br>இதுதான் ஐயா பொன்னகரம்"**

உலகப் புகழ்பெற்ற சிறுகதை ஆசிரியர்களுள் எட்கார் அவன்போ, ஓகென்றி, மாப்பாசன் ஆகியோரது சிறுகதைகளில் சிறுகதை முடிவு சிறப்பாக வெளிப்படுவதைக் காணமுடிகின்றது. (தமிழில் இவர்களது படைப்புக்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.)

மாப்பாசனின் **"வைரநெக்லஸ்"** என்ற பிரசித்தமான சிறுகதை ஒன்று (தமிழில் இதற்கு பலமொழிபெயர்ப்புகள் உண்டு.) இச்சிறுகதையில் வருகின்ற கதாநாயகி நகைகளுக்கு ஆசைப்படுகிறாள். காதலன் அவளை மகிழ்ச்சியடைய செய்ய பல தியாகங்களைச் செய்கிறான். இருவரும் பல வருடங்கள் கடனை அடைப்பதற்காக எளிமையான வாழ்க்கை வாழ்கின்றனர். இறுதியிலே தான்

உண்மை வெளியாகிறது. கடன் வாங்கிய நகைகள் போலி நகைகள். அவை அசல் நகைகள் என்றெண்ணி காணாமற்போன நகைகளுக்காக அசல் நகைகளை வாங்கிக்கொடுக்கின்றனர். எல்லாம் ஆனபிறகே உண்மை வெளிப்படுகிறது. உண்மை வெளிப்படும் கட்டம் மிகஉருக்கமாக இருக்கிறது.

தமிழகத்தின் சிறந்த எழுத்தாளரும் விமர்சகருமான ஜெயமோகன் சிறுகதையில் **"முடிவு"** பெறும் முக்கியத்துவம் பற்றி முக்கியமான கருத்தொன்றைக் குறிப்பிடுவார். அதாவது **"கதை"**யைச் **"சிறுகதை"** ஆகச் செய்வதே அதன் **"முடிவு"** தான்; பின்வருமாறு விளக்குகின்றார்.

**"ஒரு ஊரில் ஒரு காகம் இருந்தது அந்தக் காகம் தன்னைப்பற்றி உயர்வான கற்பனை கொண்டதாக இருந்தது (1)**

**ஒருநாள் அந்தக் காகம் ஒரு வடையை திருடிக்கொண்டு வந்து மரத்தில் அமர்ந்தது(2)**

**அப்போது அங்கு ஒரு நரி வந்தது. அது தந்திரக்கார நரி (3)**

**நரி காகத்திடம் "காக்காயே, உன் குரல் இனிமையானது என்றும், நீ சிறந்த பாடகன் என்றும் கேள்விப்பட்டேன்.ஒரு பாட்டுப்பாட மாட்டாயா?" என்று கேட்டது.(4)**

**புகழ்ச்சியில் மயங்கிய காகம் வாயைத் திறந்து "கா! கா!" என்று பாட்டு பாடியது. (5)**

**அப்போது வடை கீழே விழுந்தது. நரி வடையுடன் ஓடிப்போயிற்று. (6)**

**புகழ்ச்சிக்கு மயங்குகிறவன் ஏமாளி" (7)**

இது ஒரு நீதிக்கதை. இந்தக்கதையின் மையம் என்ன? சொற்றொடர் 7 தான். மொத்தக்கதையும் அந்த மையத்தை நமக்குச் சொல்லும் பொருட்டே அமைந்துள்ளது. கதை முடிந்ததும் நமக்கு அதன் மையக்கருத்து தெளிவாகப் புரிந்துவிடுகிறது.

ஏழாம் சொற்றொடர் இல்லாவிட்டாலும் கூட அந்த நீதியை நாம் அடைந்துவிட முடியும்.

இதே கதை இப்படி முடிகிறது என்று வைத்துக்கொள்வோம். ஐந்தாவது சொற்றொடருக்குப் பின்னால் கதை இப்படி உள்ளது.


**"புகழ்ச்சியில் மயங்கிய காகம் வடையை தன் காலால் பிடித்துக் கொண்டு வாயைத் திறந்து கா! கா!"** என்று பாட்டுப்பாடியது.

நரி வாயைத்திறந்து காகம் சொன்னது **"அஸ்கு புஸ்கு ஒன்றாம் வகுப்பு பிள்ளைகள் இந்தக் கதையை பாடத்தில் படிப்பதை நான் நிறையத்தடவை கேட்டிருக்கிறேன்."**

இது இப்போது ஒரு சிறுகதையின் வடிவத்தை அடைந்துவிட்டது என்பது கவனத்திற்குரியது.

**-தொடரும்-**

# புதிய வரவுகள்




**நூல் :** "தேனகம்"

**வெளியீடு :** மண்முனை - வடக்கு,
பிரதேச செயலக கலாசாரப்பேரவை.


**ஆண்டு :** 2011

"தேனகம்" - பத்தொன்பதாவது ஆண்டு முத்தமிழ் விழாச்சிறப்பு மலர். மட்டக்களப்பு மண்முனை வடக்கின் வரலாறுகளை புடம் போட்டுக் காட்டும் வகையில் பிரசவமாகியிருப்பது வரவேற்கத்தக்கது.

கல்லடிப் பாலத்தின் அழகிய தோற்றம், வாவியின் அழகிய வண்ணப்படத்துடன் அட்டை புதுப்பொலிவு பெற்றுள்ளது.

இம் மலர் வாழ்த்துரை, வெளியீட்டுரை, கட்டுரைகள், கலைஞர் கௌரவம் போன்ற பல்வேறு விடயங்களைச் சுமந்து வெளிவந்துள்ளது.

---




**நூல் :** "முற்றத்து அறுகுகள்" (கவிதை)

**ஆசிரியர் :** லி.ரிகரன்

**முகவரி :** வன்னியனார் வீதி,
களுதாவளை.


**விலை :** ரூபா. 180:00

இக்கவிதை நூலில் வாழ்த்து, அணிந்துரை, திறனுரை, முன்னுரை, கவிதைகள் என்பன இடம்பெற்றுள்ளன.

அனைவரும் எளிதில் படித்து உணரக்கூடிய வகையில் சிறுகவிதைகளாக கன்னிக் கவிஞரின் படைப்பு முழுப் பிரசவமாக வெளிவந்துள்ளது.

அழகிய அட்டைப்படத்துடன் 92 பக்கங்களில் களங்கண்டுள்ள இக் கவிதை நூல் மட்டக்களப்பின் படைப்பிலக்கியத்தில் புது அடையாளம் எனலாம்.

# ஆரோக்கியத்தைப் பேண உதவும் யோகா



- செல்லையா துரையப்பா -

இன்று பெரும்பாலான மாணவர்கள் ஐந்தாம் வகுப்பிலிருந்தே பிரத்தியேக வகுப்புக்கு ஓடுதல், கண் விழித்து நீண்ட நேரம் தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் கணனி முன் உட்கார்ந்து இருத்தல், கொழுப்பு அதிகம் அடங்கிய துரித உணவுகளை விரும்பி உண்ணுதல், போதிய உடற்பயிற்சி இன்மை போன்றவற்றால் இளம் வயதிலேயே அதிகரித்த உடல் பருமனை (Obesity) அடைகின்றனர். இதனால் பல நோய்கள் ஏற்படுகின்றன. சமீபத்தில் அமெரிக்க சர்வகலாசாலை ஒன்றில் நடாத்தப்பட்ட ஆராய்ச்சியில் ஏழு வயதில் போதிய உடற்பயிற்சியின்றி இருத்தலால் உயர் இரத்த அழுத்தம், உயர் கொலொஸ் ரோல், இருதய வியாதி, நீரிழிவு, மூட்டு வலி போன்ற நோய்கள் பதினான்கு வயது இளமையிலேயே தாக்கும் அபாயம் உள்ளது எனக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இதிலிருந்து இளம்வயதில் உடற்பயிற்சி இன்மை பிற்காலத்தில் ஏற்படக்கூடிய பாரிய ஆட்கொல்லி நோய்களுக்குச் செய்யும் முதலீடு ஆகும் என்பது தெளிவு. நாங்கள் தற்போது தொலைக்காட்சி மற்றும் கணனி, கையடக்கத் தொலைபேசி போன்றவற்றில் அதிக நேரம் செலவிடும் உடற்பயிற்சி குன்றிய இளைஞர்களைக் கொண்ட தலை முறையை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைப் பலர் உணர்வதில்லை. இது பிற்காலத்தில் நோயாளர்களைக் கொண்ட சமுதாயம் ஏற்பட வழிவகுக்கும் என்றால் மிகையாகாது. மேலும், இன்றைய இளைஞர்கள் அதிக நேரம் கண்விழித்து இருப்பதால் போதிய உறக்கம் கிடைப்பதில்லை. போதிய உறக்கமின்மைக்கும், உடல், உள நலத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. உறக்கம் கெடுவதால் நீரிழிவு நோய்,

இருதய வியாதி போன்ற நோய்கள் இளம் வயதிலே தாக்கும் ஆபத்து உண்டு. இந்த பாதிப்பு அதிகமாகப் பெண்களைத் தாக்கும்.

உறக்கமின்மை உடலில் இயற்கையாகச் சுரக்கப்படும் ரிப்டோபான் (Trytophan) என்ற அமினோ அமிலம், செரடோனின் Serotonin என்ற நரம்புகளிடையே தொடர்பை ஏற்படுத்தும் பொருள், மெலடோனின் (Melatonin) என்ற ஹார்மோன் போன்றவற்றின் செயற்பாட்டைப் பாதித்து மன உளைச்சலை ஏற்படுத்தி மேற்குறிப்பிட்ட நோய்கள் ஏற்படக் காரணமாக இருக்கின்றது.

இன்று கொழும்பு மற்றும் தலைநகரங்களில் உள்ள வீடுகளில் சமைப்பது விரைவாகக் குறைந்து கொண்டு வருகின்றது. குடும்பத்தோடு சென்று உணவு விடுதிகளில் சாப்பிடும் கலாசாரம் மிக வேகமாக அதிகரித்துக் கொண்டு வருகிறது.

இந்த உணவு விடுதிகள் கண்களைக் கவரும் வண்ணம் அழகாக அலங்கரிக்கப்பட்டு வாடிக்கையாளர்களைக் கவரும் யுக்தியைக் கையாளு கின்றன. இப்படிப்பட்ட உணவு விடுதிகளில் சுகாதாரத்தைப் பேணி உணவு சமைக்கப்படுவதில்லை. அங்குள்ள சமையலறையைப் பார்த்தால் அங்கே உணவு உட்கொள்ளும் எண்ணமே பறந்தோடி விடும். நட்சத்திர உணவு விடுதிகளில் ஓரளவு சுகாதாரம் பேணப்பட்ட போதிலும் அங்கு காலக்கெடு கடந்த பொருட்களைக் கொண்டு சமைக்கப்பட்ட அதிக கொழுப்பு, குறைவான புரதம் அடங்கிய உணவுகள் பரிமாறப்படுவதால் உயர் இரத்த அழுத்தம், இருதயநோய், புற்றுநோய், சிறுநீரக நோய், கல்லீரல் நோய், களைப்பு, மன உளைச்சல், அதிகரித்த உடற்பருமன் போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இங்கு தயாரிக்கப்படும் உணவுகளின் சுவையை அதிகரிக்கச் சேர்க்கப்படும் இரசாயன சுவையூட்டிகள் பல நோய்களை ஏற்படுத்தும். சுகாதாரம் பேணப்படாது சமைக்கப்பட்ட துரித உணவுகளை உண்பதால் மஞ்சள் காமாலை, நெருப்புக் காய்ச்சல், வயிற்றோட்டம், அதிகரித்த கொலொஸ்ரோல் போன்ற பயங்கர நோய்கள் ஏற்படும் அபாயம் உண்டு.

அதிகரித்த உடற்பருமன் இன்று சுகாதாரத்துறைக்குப் பாரிய சவாலாக உள்ளது. இதன் காரணமாகப் பத்து வயதுடைய சிறார்களைக் கூட நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இருதய வியாதி, நுரையீரல் வியாதி, மூட்டுவலி போன்ற நோய்கள் தாக்கியுள்ளன. வயோதிபர்களைத் தாக்கும் எலும்புருக்கி நோய் (Osteoporosis) தற்போது சிறார்களையும் பீடித்துள்ளது பரிதாபகரமான விடயமாகும். உலகளாவிய ரீதியில் நான்கு இலட்சம் பேர்கள் வருடாந்தம்

அதிகரித்த உடற்பருமன் காரணமாக ஏற்பட்ட நோய்களால் மரணமடைகின்றனர். இதன் காரணமாக இலங்கையில் பதினாறாயிரம் பேர் 2005 ஆம் ஆண்டு உயிர் இழந்துள்ளனர். மேலும், இங்கு ஒரு இலட்சம் பேரில் நானூறு பேர்கள் உயர் இரத்த அழுத்த நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

உடற்பருமன் உடைய தகப்பன்மார்கட்குப் பிறக்கும் குழந்தைகள் கல்லீரல் நோயால் பாதிக்கப்படுவர் என சமீபத்திய ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மேலும், நாற்பது வயதில் பெரும் தொந்தி இருந்தால் ஞாபகமறதி (Dementia) வயோதிப வயதில் ஏற்படும். உடற்பருமனும் அல்ஸீமரஸ் (Alzheimer's) என்ற மறதிநோயை ஏற்படுத்தும் காரணிகளில் ஒன்றாக உள்ளது என்றும், உடற்பருமனும் பெரும் தொந்தியும் இருந்தால் மேற்படி ஞாபகமறதி நோய் ஏற்படும் ஆபத்து 230 சத வீதத்தால் அதிகரிக்கும் என சமீபத்தில் அமெரிக்காவில் நடாத்தப்பட்ட ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

துரித உணவுகளின் சுவையை அதிகரிக்கச் சேர்க்கப்படும் இரசாயனக்கலவை மற்றும் கொழுப்பு போன்ற பொருட்கள் இரத்தக் குழாய்களில் அடைப்பை ஏற்படுத்துவதன் மூலம் இருதய நோய்கள் ஏற்படுகின்றன. மேலும், புற்று நோய்களும் ஏற்படும் அபாயமும் உண்டு. இவ்வுணவுகளில் போதிய புரதச்சத்து அடங்கி இல்லாமையால் உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி குன்றுவதால் பல தொற்று நோய்களும் ஏற்படும் வாய்ப்புண்டு.

தற்போது மனிதர் ஆரோக்கியத்தைக் கெடுத்துப்பணம் சம்பாதித்து இழந்த ஆரோக்கியத்தை மீண்டும் பெறப்பெரும் பணம் செலவு செய்வது விசித்திரமாக இருக்கின்றது. மேலும், ஆரோக்கியமற்ற துரித உணவுகளை உண்பவர்கள் பிற்காலத்தில் அவர்களைத் தாக்கக் காத்திருக்கும் நோய்களுக்கு முதலீடு செய்கிறார்கள்.

சிறார்களும், இளைஞர்களும் நோயாளர்களாவது நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தும் அபாயம் உண்டு. இளைஞர்கள் வளம் பொருந்திய வயதில் (Productive years) நோய் வாய்ப்படுவதால் தொழில் புரியும் இடங்களில் முழுத்திறமையை வெளிப்படுத்த முடிவதில்லை. இதனால் இவர்கள் தம் தொழிலை இழக்கும் நிலையும் ஏற்பட்டு அவர்களின் குடும்பமும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது. மேலும், நாட்டில் திறமைமிக்க தொழிலாளர்களின் எண்ணிக்கையும் குறையும் ஆபத்தும் உண்டு.

-தொடரும்-

வாசகர்களுக்கு இனிய புதுவருட, தைத்திருநாள் வாழ்த்துக்கள்!



ஆரையம்பதியில்......
அழகிய ௨௨ கரட்.
தங்க நகைகளை
உத்தரவாதத்துடன்
பெற்றுக் கொள்ள
இன்றே விஜயம் செய்ய
வேண்டிய ஒரே இடம்
தங்க நகைகளின்
சொர்க்காபுரி

அபிராமி ஜீவல்ஸ்



பிரதான வீதி
ஆரையம்பதி - 02
தொ.பே : 065 - 3644944
077 - 6506329

AD/0008

வாசகர்களுக்கு இனிய புதுவருட, தைத்திருநாள் வாழ்த்துக்கள்!

அம்மன் துணை

லக்ஷனா

கொம்பியூட்டர் சீல்

*Pre - Ink (Five Colour)*



*Polymer Stamp*

ஒரு மணித்தியாலத்தில்
தரமாக செய்து தரப்படும்.

வெயிலி வீதி. அரசடி, மட்டக்களப்பு.
தொ.பே : 065 36 470 57, 077 69 155 74.
*E-mail -ladshana@gmail.com*

AD/0024

வாசகர்களுக்கு இனிய புதுவருட, தைத்திருநாள் வாழ்த்துக்கள்!


மட்டு நகரில்......
அழகிய 22 கரட் தங்க நகைகளை
உத்தரவாதத்துடன் செய்து
பெற்றுக்கொள்ள நாட வேண்டிய
தங்க நகைகளின் சொர்க்காபுரி








சுபாஜினி
ஜுவலரி



51, பிரதான வீதி
மட்டக்களப்பு.
தொ.பே: 065-2224863

AD/0005

# " தென்றல் " குறுக்கெழுத்துப் போட்டி இல - 07



## இடமிருந்து வலம்

01. அரைவாசி
03. விக்கிரமாதித்தனுக்கு வேதாளம் சொல்லியது.
05. கூழுக்கும் மீசைக்கும் இதற்கும் தொடர்புண்டு.
07. அதிகாலைப் பொழுது.
09. வாத்தியக் கருவிகளுக்கு பயன்படுத்துவர் (திரும்பியுள்ளது)
10. மிகை (குழம்பியுள்ளது)
13. கோபம் வந்தால் படமெடுக்கும்.
16. பொறுமையில் சிறந்தவர்.
18. இதை மாமியார் உடைத்தால் மண்; மருமகள் உடைத்தால் பொன். (குழம்பியுள்ளது).
19. பம்பை நதிதீரத்தில் இருந்த மதங்க முனிவரின் சீடர். ஐயப்பசாமி யாத்திரையுடன் தொடர்புடையது. (குழம்பியுள்ளது)
21. கூத்தன்.
23. இதற்குப் பெயர்தான் சாந்தி
24. நீயும் நானும் அவனும் சேர்ந்தால் இப்படியாவோம்.
25. தொட்டால் சுடும்.

## மேலிருந்து கீழ்

01. பொம்மை
02. நாள்
04. வலிபோக்கும் மருந்து
05. 3ம் வேற்றுமை உருபுகளுள் ஒன்று.
06. தின்னத்தின்ன ஆசை. இதை இன்னும் கேட்டால் பூசை (தலைகீழ்)
08. வீட்டின் ஒரு பகுதி (தலைகீழ்)
11. சூரியனின் ஒளிக்கீற்று
12. மகாத்மா காந்தியின் ஆடை
13. சிந்துவெளியில் சிறந்து விளங்கியது.
14. கவிச்சக்கரவர்த்தி
15. தண்ணீர் (தலைகீழ்)
17. மச்சம், தேமல்
20. வாய்பேச முடியாதவர்.
22. வைத்தியர் பிடித்துப் பார்ப்பது (தலைகீழ்)

* விடைகளை இங்கு வெளியாகியுள்ள கூப்பனில் எழுதிக் கத்தரித்து, தபால் அட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும்.
* தபால் உறைக்குள் வைத்து அனுப்பப்படும் கூப்பன் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
* முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக 300/, 200/-, 100/- வழங்கப்படும்.
* போட்டி முடிவுத்திகதி 15.02.2012
* விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :-

**"தென்றல்"**
**குறுக்கெழுத்துப் போட்டி இல.07,**
**44/1, பழைய கல்முனை வீதி,**
**கல்லடி,**
**மட்டக்களப்பு.**

## "தென்றல்" குறுக்கெழுத்துப் போட்டி இல. - 06 இல் வெற்றி பெற்றோர்

### முதலாம் இடம்

செல்வி.அ.ஷிரோமிலக்ஷாந்தி
"இனிக்கோ"
புதுமுகத்துவார வீதி,
கல்லடி,
மட்டக்களப்பு.

### இரண்டாம் இடம்

திருமதி. பி.ரஜனி
டானியல்வீதி,
திமிலைதீவு, மட்டக்களப்பு.

### மூன்றாம் இடம்


திருமதி.டி.நிஷாந்தன்
ஈச்சந்தீவு, கன்னன்குடா,
ப.நோ.கூ.சங்கம்,
வவுணதீவு

## குறுக்கெழுத்துப் போட்டி - 06 இற்கான விடைகள்


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ந | 2 தி | | 3 கு | 4 ரு | 5 வி | | 6 மா |
| 7 வ | சை | 8 ம் | | 9 ம | ன் | 10 ன | ன் |
| ம் | | க | | 11 த | ண | ல் | |
| | 12 ள் | மு | | 13 ம் | ண் | மு | 14 ட |
| 15 னி | க | | | | | க | ம் |
| ன் | | 16 ப | 17 ர | த | ன் | | ன |
| த | 18 தி | | மி | | 19 டு | 20 ண் | ந |
| 21 ம | ர | வ | ள் | ளி | | ப | |

# விலங்குகளின் விநோதம்


- சி.டானியல் -



கேட்டயாடி புதினம்
மனுஷங்க எல்லாம் தலை
கீழா நின்று சிரகாசனம்
செய்றாங்களாம். உடம்புக்கு
நல்லமெண்ணு. நாம
எவ்வளவு கொடுத்து
வைச்சவங்க பார்த்தாயா?



"கவலைப்படாதீங்க எல்லா
முட்டைகளையும் குஞ்சாய்ப்
பொரிச்சுடுவன்"
"கவனமா பாருடி குயில் முட்டை
இருக்கும்"



குடும்ப மருத்துவத் தொடர்

# மனித வாழ்வு கருவறை முதல்........

- Dr.K.அருளானந்தம் (MBBS, D,F,M) விரிவுரையாளர்
சௌக்கியபராமரிப்பு கற்கைகள் பீடம், கிழக்குப்பல்கலைக்கழகம். -

## கரு:

மனிதனின் வாழ்க்கை கருவில் தான் தொடங்குகிறது. அதாவது கண்ணுக்குப் புலப்படாத மனிதனால் உணரக்கூடிய மிக அந்தரங்க செயற்பாட்டில் ஆண் கருவும், பெண் கருவும் ஒன்றிணைவதன் மூலம் மனித இனம் உருவாகிறது.

மனித உடலில் காணப்படுகின்ற ஒவ்வொரு கலத்திலும் 23சோடி நிறமுகூர்த்தங்கள் காணப்படுகின்றன. இவற்றில் ஆணின் கருக்கட்டக்கூடிய விந்துக்கலத்தில் 23உம், அதே போன்று பெண்ணின் கருக்கட்டக்கூடிய முட்டை கலத்தில் 23உம் ஒன்று சேர்வதனால் 23 சோடி கொண்ட கரு உருவாகிறது.

இக் கரு தாயின் கருப்பையில் பதிக்கப்பட்டு முளையமாகி பல கலங்களைக் கொண்ட சிசுவாக வளர்ந்து வருகிறது. இந்த மிக முக்கியமான கால கட்டத்தில் கண்ணுக்குப் புலப்படாத, எவராலும் மாற்ற முடியாத மிகவும் விசித்திரமான வளர்ச்சிப் படி முறைகளில் சிறு தாயின் கருப்பையில் வளர்கிறது.

## குழந்தை பிறப்பு:

மூடிய அறையில் முழு அளவிலான மாற்றங்களைப் பெற்றவுடன் ஒரு அழகிய குழந்தையாக பிரசவமாகிறது. இக் கால கட்டத்தில் தாயின் உடலிலும், உள்ளத்திலும், உணர்விலும் பல உயிர்ப்பான மாற்றங்கள் ஏற்படுகின்றன. அதாவது பெண் தாய்மையடைகிறாள். கிட்டத்தட்ட 9மாதமும், 7நாட்களும் குடிகொண்டிருந்த சிசு இயற்கையின் தேவைக்காய் இயற்கைப் பொறிமுறைகளுக்கூடாக தாயின் கருப்பையிலிருந்து பிரசவிக்க முயல்கிறது.

இம் முயற்சிக்கு இயற்கை மறுக்கும்போது தற்கால மருத்துவ வளர்ச்சி பெரிதும் உதவுகிறது. எனினும் கரு உண்டாக்கப்பட்டு, சிசுவாக வெளியேற்றும் வரை எந்தவிதமான விருப்புகளுக்கும் இடமளிக்காது. குழந்தை பிரசவமாகும் முதல் நிமிடத்திலேயே முதல் சுவாசம் மூலம் தனது புது வாழ்வை

ஆரம்பிக்கிறது. அதாவது மனித உடல் தனித்துவமாக வளி மண்டலத்துடன் இணைகிறது.

இச் சுவாசம் தன் வாழ்நாள் முழுவதும் ஒரு நிமிடமேனும் ஓய்வெடுக்காது தொடர்ந்து இயங்கி இறுதி மூச்சுவரை காலக்கிரமமாக நடைபெறுகிறது.

மனிதன் விஷேச விலங்காக இவ் உலகிற்கு வெளிக்காட்டத் தொடங்குகிறான். தன்னுடைய மூளை வளர்ச்சி, ஆன்மீகபலம், தற்கால தொழில் நுட்பம், உலக மயமாக்கல், நவீன தொடர்பாடல் முறைகள், புதுப்புது கலை - கலாசார மாற்றங்கள், விசேடமான உணவு முறைகள், வேறுபட்ட உறவுகள், மாற்றங்கொண்ட சூழல்கள், எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள், வெற்றிகள், தோல்விகள், இன்பங்கள், துன்பங்கள், விருப்புக்கள், வெறுப்புக்கள் என்பவற்றை நாளுக்கு நாள் சந்திக்கிறான்.

ஒரு குழந்தை பிறந்த அந்த நிமிடத்தில் ஒரு பொதுக்குழந்தையாக உள்ள போது எந்த விதமான செயற்பாட்டுக்கும் உட்படாது இருக்கின்றான். இந் நிலையில் இக்குழந்தை பிறந்த சூழல், சமூகம், கலாசாரம், மொழி என்பனவற்றுக்கூடாக வளர்த்தெடுக்கப்படுகிறான்.

பரம்பரை அலகு மட்டும் மாறாமல் இருக்க அதனுடைய ஏனைய செயற்பாடுகள் மாற்றம் பெறத்தொடங்குகிறது. இப்போதுதான் சமூக வேறுபாடுகள் உருவாகிறது.

முதல் நாளிலே அழுகை மூலம் தனது சுவாசத் தசைகளை அசைத்து ஏற்கனவே இருந்த சுவாசப்பையை அசைக்கத் தொடங்கிய குழந்தை வளி மண்டலத்திலுள்ள ஒட்சிசனை ($O_2$) உட் கொண்டு உயிர் வாழத்தொடங்குகிறது. அதன் பின்புதான் தாய்ப்பாலை அதாவது முதலுணவைத் தனது தாயின் மடியிலிருந்து உணர்வுடன் பெறுகிறது. இறைவன் ஒட்சிசனை மட்டும் உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் எந்த விதமான வேறுபாடுகளையும் மறந்து இலவசமாக 24 மணித்தியாலயமும் வழங்கிக் கொண்டிருக்கின்றான்.

இந்நிலையில் உதயமாகும் ஒரு குழந்தையின் முதல்நாள் நிறை கிட்டத்தட்ட 2kg தொடக்கம் 3Kg ஆகவும், அதன் நீளம் கிட்டத்தட்ட 50cm ஆகவும் இருக்கும்.

இக் காலப்பகுதியில் மேற்படி குழந்தை அனைத்து புலன்களையும், உடற்தொழிற்பாடுகளையும் ஆரம்பிக்கிறது. ஆனால் இனப்பெருக்கத்தொகுதி மட்டும் தனது செயற்பாடுகளை ஆரம்பிப்பதில்லை.

-தொடரும்-

# புலமைப்பரிசில் பரீட்சை (2011)இல் சித்திபெற்றோர் விபரம்


## மட்/ கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயம்



அருணகிரி
நர்மதா
புள்ளிகள் - 175



சிவா
கிஷோபன்
புள்ளிகள் - 173



குணரெத்தினம்
மிதுர்சனன்
புள்ளிகள் - 153



சண்முகநாதன்
துவாரகன்
புள்ளிகள் - 152

## மட்/ ஆரையம்பதி சிவமணி வித்தியாலயம்




மகாலிங்கம்
தனுஸ்கர்
புள்ளிகள் - 158



சிவராசா
குணைஸ்காந்
புள்ளிகள் - 153

## மட்/காக்காச்சிவட்டை விஷ்ணு வித்தியாலயம்



தியாகலிங்கம்
டிலக்ஷன்
புள்ளிகள் - 184

## மட்/கல்லடி முகத்துவாரம் விபுலானந்த வித்தியாலயம்



தேவராகவன்
கேஷிகா
புள்ளிகள் - 155

## மட்/ ஆரையம்பதி இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்



தெய்வேந்திரராசா
ரதீஸ்வன்
புள்ளிகள் - 178



சபாநாதன்
ஜதுர்ஷ்ரிகா
புள்ளிகள் - 164



மூத்ததம்பி
சுஜீபன்
புள்ளிகள் - 162



பிறேமசிறி
அனுஜன்
புள்ளிகள் - 159

# இவர்களைத் "தென்றல்" வாழ்த்துகிறது!

## மட்/ களுதாவளை மகாவித்தியாலயம்



கிருபாகரன்
அட்சரா
புள்ளிகள் - 172



ஸ்கந்தராசா
பிருதுஜா
புள்ளிகள் - 169



சிவதாஸ்
யோமினி
புள்ளிகள் - 168



புதுமைராசா
டிலக்சிகா
புள்ளிகள் - 168

## மட்/ களுதாவளை மகாவித்தியாலயம்



கணேசமூர்த்தி
துருஷியா
புள்ளிகள் - 154



கருணாகரன்
டிலக்ஷன்
புள்ளிகள் - 152

## மட்/ புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலயம்



கலைச்செல்வன்
டிலுக்ஷன்
புள்ளிகள் - 170



சுந்தரராஜன்
தசரிஷிகன்
புள்ளிகள் - 166

## மட்/ புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலயம்



குணசேகரம்
சுஜிஷன்
புள்ளிகள் - 162



சுந்தரலிங்கம்
சதீஸ்கரலிங்கம்
புள்ளிகள் - 154

## திரு/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி



புலேந்திரராஜ்
சஜன்
புள்ளிகள் - 172


## திரு/ அன்புவழிபுரம் கலைமகள் மகாவித்தியாலயம்



ஜெயதீஸ்வரன்
டென்ஷ்லேற்றா
புள்ளிகள் - 157

# இவர்களைத் "தென்றல்" வாழ்த்துகிறது!

**மட்/ தாழங்குடா றோ.க.த.க பாடசாலை**




துரைராஜா
இலக்கியா
புள்ளிகள் - 161



சக்திவேல்
மனோஷிகா
புள்ளிகள் - 161

**மட்/ செட்டிபாளையம் மகா வித்தியாலயம்**




கனகலிங்கம்
மயூரன்
புள்ளிகள் - 173




சிவசிங்கம்
சர்மிலா
புள்ளிகள் - 172

**மட்/ செட்டிபாளையம் மகா வித்தியாலயம்**



பிரபாகரன்
தர்சிகா
புள்ளிகள் - 171



கருணாநிதி
விருபாஷன்
புள்ளிகள் - 170



உதயகுமார்
பிரபாஞ்சலிகா
புள்ளிகள் - 170



தேவேந்திரராசா
அபிலாசினி
புள்ளிகள் - 165

**மட்/ செட்டிபாளையம் மகா வித்தியாலயம்**



குருபரன்
சுபேதா
புள்ளிகள் - 162



தேவராசா
பிரபாஜினி
புள்ளிகள் - 161



தியாகராசா
சதிசன்
புள்ளிகள் - 159

**மட்/ தேத்தாத்தீவு மகா வித்தியாலயம்**




தவராசா
சோபனகாந்
புள்ளிகள் - 155

# இவர்களைத் "தென்றல்" வாழ்த்துகிறது!

**மட்/ தேத்தாத்தீவு மகா வித்தியாலயம்**



அன்ரனியூட் இன்பராசா
யூட்டிரோசனன்
புள்ளிகள் - 152



அமிர்தலிங்கம்
பிரியங்கன்
புள்ளிகள் - 152

**மட்/ அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்**



வடிவேல்
சுகாரணி
புள்ளிகள் - 165



யோகரெத்தினம்
கிருபாஜினி
புள்ளிகள் - 162

**மட்/ மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம்**



வெற்றிவேல்
பிரியங்கன்
புள்ளிகள் - 170



சொர்ணலிங்கம்
யோதிஷன்
புள்ளிகள் - 165



காளிதாசன்
மதுமிதா
புள்ளிகள் - 163




சாந்தலிங்கம்
பவதாரணி
புள்ளிகள் - 156


**மட்/ கொக்கட்டிச்சோலை இ.கி.மி வித்தியாலயம்**



சண்முகராசா
சஞ்சயன்
புள்ளிகள் - 177



ஆறுமுகம்
நிருஷ்திகா
புள்ளிகள் - 156



வேதநாயகம்
கிந்துஜன்
புள்ளிகள் - 152

**மட்/ பெரியகல்லாறு விநாயகர் வித்தியாலயம்**



ரவிச்சந்திரன்
சிராஜ்
புள்ளிகள் - 185

# இவர்களைத் "தென்றல்" வாழ்த்துகிறது!

## மட்/ பெரியகல்லாறு விநாயகர் வித்தியாலயம்



றுக்சன்
சஜீத்
புள்ளிகள் - 184



சத்தியசீலன்
லுக்ஷிகா
புள்ளிகள் - 180



ஹரிகரமூர்த்தி
ருபேஷிகா
புள்ளிகள் - 179



பிறேமதாசன்
திலுக்ஷி
புள்ளிகள் - 171

## மட்/ பெரியகல்லாறு விநாயகர் வித்தியாலயம்



தவராசா
ஜயகரன்
புள்ளிகள் - 167



அருள்ராசா
அபிஷேத்
புள்ளிகள் - 164



சுதாசிறி
தினுக்ஷா
புள்ளிகள் - 163



வரதராஜன்
அஸ்வின்
புள்ளிகள் - 159

## மட்/ பெரியகல்லாறு விநாயகர் வித்தியாலயம்



புவிராஜ்
துஜிகிருஷ்ணா
புள்ளிகள் - 159



ரவீந்திரன்
பிரகீர்த்தன்
புள்ளிகள் - 158



தர்மபாலன்
தேனுஜா
புள்ளிகள் - 156



அன்ரனிதாஸ்
ஆஸ்கா
புள்ளிகள் - 154

# இவர்களைத் "தென்றல்" வாழ்த்துகிறது!

**மட்/ பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம்**



குணசீலன்
ருத்ரராஜசிங்கம்
புள்ளிகள் - 167



கிருபாகரன்
சினேகா
புள்ளிகள் - 155

**மட்/களுதாவளை இராமகிருஷ்ண வித்தியாலயம்**



வரதராஜன்
கோபிகாந்
புள்ளிகள் - 166



மதியழகன்
மிதுஷான்
புள்ளிகள் - 158

---


**மட்/ களுதாவளை இராமகிருஷ்ண வித்தியாலயம்**



சிவராமலிங்கம்
விசாழினி
புள்ளிகள் - 156



சோமசுந்தரம்
பிரணவதாசன்
புள்ளிகள் - 154



சந்திரகுமார்
ஹம்சவர்தன்
புள்ளிகள் - 152

**மட்/ பெரியபோரதீவு பாரதி வித்தியாலயம்**



ரவீந்திரன்
கிஷாலினி
புள்ளிகள் - 156

---

**மட்/ பெரியபோரதீவு பாரதி வித்தியாலயம்**



கருணாகரன்
அபிராமி
புள்ளிகள் - 152

**மட்/ கோட்டைக்கல்லாறு மகாவித்தியாலயம்**



ஜெயராஜ்
நிலுக்ஷிகா
புள்ளிகள் - 182




தயாபரன்
ரக்ஷனா
புள்ளிகள் - 155



விக்னேஸ்வரன்
குகேஷாந்
புள்ளிகள் - 155

# இவர்களைத் "தென்றல்" வாழ்த்துகிறது!


## மட்/வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயம்



துரைராசா
சாயிதன்
புள்ளிகள் - 173



குணநாயகம்
ரினோஜன்
புள்ளிகள் - 171



பத்மசீலன்
தனஞ்சயன்
புள்ளிகள் - 168




கஜேந்திரன்
கடோக்சினி
புள்ளிகள் - 166

## மட்/வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயம்




சிவலிங்கராஜா
கிருசாழினி
புள்ளிகள் - 166



உதயகுமார்
உமாதேவி
புள்ளிகள் - 166



சிவகுரு
கம்சினி
புள்ளிகள் - 165



தருமலிங்கம்
டிலக்சீகா
புள்ளிகள் - 163

## மட்/வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயம்



பாக்கியராஜா
பவுளினி
புள்ளிகள் - 159



சித்தம்பலம்
சதுணா
புள்ளிகள் - 152



குப்புசாமி
சப்திகா
புள்ளிகள் - 151



சித்திரவேல்
துலாஞ்சலி
புள்ளிகள் - 151

# இவர்களைத் "தென்றல்" வாழ்த்துகிறது!

## மட்/ முனைக்காடு விவேகானந்த வித்தியாலயம்



விசுவலிங்கம்
மிகுணன்
புள்ளிகள் -168



கேசவப்போடி
சுலக்ஷன்
புள்ளிகள் - 164



தியாகராசா
ஜிவிதன்
புள்ளிகள் - 160



யோகராசா
குருஷிகா
புள்ளிகள் - 159

## மட்/ முனைக்காடு விவேகானந்த வித்தியாலயம்



மோட்சசேகரம்
பிரவிநாத்
புள்ளிகள் - 156



ஆரோக்கியம்
புர்தீஸ்
புள்ளிகள் - 153



இரகுநாதன்
கிரிசாந்
புள்ளிகள் - 151

## மட்/முதலைக்குடா மகா வித்தியாலயம்



பரமலிங்கம்
அஜந்தன்
புள்ளிகள் - 172

## மட்/முதலைக்குடா மகா வித்தியாலயம்



தவனேஸ்வரன்
பவதாரணி
புள்ளிகள் - 169



புலேந்திரன்
தயாகரி
புள்ளிகள் - 166



திருமால்
கவிவக்சன்
புள்ளிகள் - 157



பரமலிங்கம்
தனுஷ்கா
புள்ளிகள் - 153


**தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை**
**எடுக்கும் மாணவர்களுக்கான முன்னோடி வழிகாட்டல்**
**பயிற்சி பரீட்சை இல.02**


பெயர்:- ............................................... நேரம் :- 45நிமிடம்.

ஆசிரியர் :- யோ.இ.ஞானரெட்ணம்

**பகுதி I**

● இல 1-2 வரை தரப்பட்டுள்ள வினாக்களிலுள்ள வித்தியாசமான உருவினைத் தெரிந்து கோடிடுக.

1. 

2. 

● இல 3-7 வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கான சரியான விடையினைத் தெரிந்து அதன் இலக்கத்தினை அடைப்புக்குள் எழுதுக.

3. அறுகோண வடிவில் கூடு அமைக்கும் பிராணி.
   I.குளவி II. தேன்சிட்டு III. தேனீ IV. தூக்கணாங்குருவி (........)

4. தாளம் போடல் எனும் மரபுத்தொடரின் கருத்து
   I. வறுமையால் வாடல் II. குற்றத்தை மறைத்தல்
   III. ஏமாற்றுதல். IV. சொல்தவறுதல் (........)

5. பழிக்குப்பயப்படாதே எனும் கருத்திற்குப் பொருத்தமான பழமொழி
   I.உப்பிட்டவரை உள்ளளவும் நினை II. கந்தையானாலும் கசக்கிக்கட்டு
   III. காகம் திட்டி மாடு சாகாது IV. ஆறிலும் சாவு நூறிலும் சாவு
   (........)


6. பாலைவனம் என்பது
   I. காடுகள் உள்ள பிரதேசம் II. மணல்கள் அற்ற பிரதேசம்
   III.மரங்கள் அற்ற பிரதேசம் IV. குளிரான பிரதேசம் (........)

7. காலத்தை ரசிப்பவனை அழைப்பது
   I.காலரசன் II. காலதேவன் III.காலமுதல்வன் IV. காவலன் (........)

8. மாதுளை - துவரம், வசனை
   I.சாகரம் II. சாதனை III. சதம் IV. சுனை (........)

9. [5743] ⟶ [7435] ⟶ [4357]   I. [3574]   II. [3547]   III. [5347]   IV. [3457]

● தரப்பட்டுள்ள வடிவங்களின் பெறுமானங்களைக் காண்க.




10. இதன் பெறுமானம் - I. 3   II. 4   III. 5   IV. 2

11. "○" இதன் பெறுமானம் - I. 2   II. 5   III. 3   IV. 6

12. "△" இதன் பெறுமானம் - I. 5   II. 2   III. 4   IV. 3

13. □+ இதன் பெறுமானம் - I. 3   II. 4   III. 7   IV. 2

14. வயலும் வயல் சார்ந்த இடமும்

I.முல்லை   II.நெய்தல்   III.மருதம்   IV. பாலை


15. கூடையொன்றிலுள்ள பழங்களின் எண்ணிக்கையைப் போல இரு மடங்கு பழங்கள் சாக்கில் உள்ளது. சாக்கிலுள்ள பழங்களின் எண்ணிக்கை 250 எனில் கூடையிலுள்ள பழங்களில் 3/5 பங்கு சிறியவை எனில் அதன் எண்ணிக்கை

I.75 பழங்கள்   II.125 பழங்கள்   III.150 பழங்கள்   IV. 90 பழங்கள்

16. $1l$ பாலின் விலை ரூபா80.00 ஆகும். 1750$ml$ பால் வாங்க எவ்வளவு பணம் தேவை?

I.ரூபா.120.00   II.ரூபா.160.00   III.ரூபா. 130.00   IV. ரூபா. 140.00

● தரப்பட்டுள்ள பொருட்களின் விலைகளை அவதானித்து சரியான விடையினைக் காண்க.




17. மாதுளம் பழமொன்றின் விலை

I. ரூபா.10.00   II. ரூபா.20.00   III. ரூபா.35.00   IV. ரூபா.40.00

18. அப்பிள் பழமொன்றின் விலை


I. ரூபா.40.00   II. ரூபா.35.00   III. ரூபா.30.00   IV. ரூபா.60.00

19. தோடை, அன்னாசிப்பழங்கள் வாங்க எவ்வளவு பணம் தேவை.

I. ரூபா.145.00   II. ரூபா.180.00   III. ரூபா.150.00   IV. ரூபா.165.00

20. அன்னாசிப்பழமொன்று வாங்கும் பணத்திற்கு எத்தனை மாம்பழங்கள் வாங்கலாம்.

I. ஆறு II. ஏழு III. ஐந்து IV. எட்டு




21. B நகரிலிருந்து F நகரிற்குச் செல்வதற்கான தூரம் எத்தனை Km?

I. 150Km II. 125Km III. 140Km IV. 170Km

22. A நகரிலிருந்து E நகரிற்குச் செல்வதற்கான தூரம் எத்தனை Km?

I. 145Km II. 155Km III. 170Km IV. 125Km

23. கடும் வரட்சியினால் நெல் வயல்கள்

I. செழிப்பாகின II. கதிர்கள் முற்றின III. கருகிப் போயின IV. விளைந்தன

24. A,B இருவரிடமும் 380 பழங்கள் உள்ளன. Bஐ விட A 80 பழங்கள் குறைவாக வைத்துள்ளான் எனில் Bயிடமுள்ள பழங்கள் எத்தனை?


I. 150 பழங்கள் II. 230 பழங்கள் III. 125 பழங்கள் IV. 215 பழங்கள்




25. குமரனிடமுள்ள பணத்தில் 2/5 பங்கை உணவிற்கும், 1/5 பங்கை உடைக்கும் செலவிட்டான். அவனிடமுள்ள மீதிப்பணம் 1900.00 ரூபா எனில் ஆரம்பத்தில் அவனிடமிருந்த பணம் எவ்வளவு?

I. 4750.00 II. 4650.00 III. 4350.00 IV. 5000.00

26. 1990ம் ஆண்டு 8வது ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது எனில் 3வது போட்டி எந்த ஆண்டில் நடைபெற்றிருக்கும்.

I. 1964 II. 1960 III. 1952 IV. 1970

27.  தரப்பட்டுள்ள கீலத்தினை முறிந்த கோட்டின் வழியாக மடித்தால் பெறப்படும் வடிவம்.


I.  II.  III.  IV. 

28. உந்துஉருளியின் வேகமாணி காட்டிய தூரம் காட்டப்பட்டுள்ளது.

| 0240309 Km |
|---|

இவ்வுந்துஉருளியானது 105Km பயணம் செய்த பின் வேகமாணி காட்டும் தூர அளவு யாது?

I. 0240614 Km II. 0250309 Km III. 0240414 Km IV. 0240514 Km

29. 

தரப்பட்டுள்ள கடிகாரத்தின் முட்கள் காட்டும் நேரமானது 1மணி 30 நிமிடம் பிந்தி காட்டுகின்றது எனில் சரியான நேரத்தினை காட்டும்போது முட்கள் காட்டும் கோணம் யாது?

I. செங்கோணம் II. விரிகோணம் III. கூர்ங்கோணம் IV. நேர்கோணம்

30. பவளம் - 2468, வளசம் - 4618 எனில் சவளம் எனும் சொல்லுக்குப் பொருத்தமான இலக்கங்கள்.

I. 1468 II. 1648 III. 8461 IV. 4681

31. 2kg 300g பயறின் விலை ரூபா 184.00 ஆகும் எனில் 650g பயறின் விலை

I. ரூபா62.00 II. ரூபா38.00 III. ரூபா142.00 IV. ரூபா 52.00

32. பணிவு - அடக்கம்; மூர்க்கம் - கோபம் எனில் மதிப்பு

I. கௌரவம் II. பெருமை III. மரியாதை IV. தொண்டு


33. 125*ml* கொள்ளளவுடைய பாத்திரமொன்றினால் 24 தடவைகள் நீர் ஊற்றியபோது குறிப்பிட்டபாத்திரம் நிரம்பியது எனில் அப்பாத்திரம் கொள்ளும் நீரின் அளவு யாது?

I. 4*l* II. 3*l* III. 5*l* IV. 7*l*


34. வட்டமொன்றினை மூன்றாக மடித்து வெட்டப்பட்டபகுதி படத்தில் காட்டப்பட்டுள்ளது.



இதனை விரித்தால் பெறப்படும் வடிவம்

I.  II.  III.  IV. 

● A,B,C நகரங்களுக்கு இடையிலான தூரங்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளன.




35. C நகரத்திற்கான தூரம் எத்தனை Km ஆகும்.

I. 180km II. 160km III. 190km IV. 210km

36. A நகரத்திற்கான தூரம் எத்தனை Km ஆகும்.

I. 120km II. 220km III. 210km IV. 240km

37. எந்த இரு நகரங்களுக்கு இடையிலான தூரம் சமனாக உள்ளது?

I. A,B II. B,C III. A,C IV. A,D

38. மாசிமாதம் 15ம் திகதி புதன்கிழமை எனில் பங்குனி மாதம் 21ம் திகதி என்ன கிழமை?

I. சனி II. ஞாயிறு III. வெள்ளி IV. புதன்

39. மாமியிடமுள்ள பணத்தில் 50 ரூபாவை நான் எடுத்தால் இருவரினதும் பணத்தொகை சமனாகும். மாறாக நான் 25ரூபாவை மாமாவிற்கு கொடுத்தால் என்னிடமுள்ள பணத்தினைப் போல் 7 மடங்கு பணம் மாமாவிடம் இருக்கும் எனில் மாமாவிடமுள்ள பணம் எவ்வளவு.

I. 175.00 II. 200.00 III. 125.00 IV. 150.00

40. 1m துணிரூபா 90.00 ஆகும் எனில் 3m 50 cm துணி வாங்கி, ரூபா 500.00ஐ கொடுத்தால் உமக்கு கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

I. ரூபா 185.00 II. ரூபா 175.00

III. ரூபா 190.00 IV. ரூபா 195.00

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புதுவருட, தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்!





**ஆண், பெண் இருபாலாருக்கும் சகல விதமான சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும். வீதி ஒழுங்கு மற்றும் இயந்திரவியல் பற்றிய பாடங்கள் தரமான ஆசிரியர்கள் மூலம் ஒழுங்கு முறையில் இலவசமாக கற்றுக்கொடுக்கப்படும்.**

**VEHICLE HIRE**

திருமணவைபவங்களுக்கு
கார் மற்றும்
சொகுசு பஸ்
வழங்கப்படும்.





இவற்றோடு மஞ்சந்தொடுவாயில் யப்பானில் இருந்து தருவிக்கப்பட்ட வாகனங்களின் சந்தை நடைபெறுகிறது.

**தொடர்புகளுக்கு.........**

**IYNGARAN LEARNERS**

**NO. 61, STATION CROSS ROAD**
**BATTICALOA**
**TEL: 065-265068 / 077-3138372**

AD/0026




வணசிங்கா பிரிண்டர்ஸ் 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு.